ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்

பகவான் ஆதி சங்கரர்

தமிழில்

மீ. ராஜகோபாலன்

|| श्री दक्षिणामूर्त्ति स्तोत्तिरम् ||

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்

பகவான் ஜகத்குரு ஆதி சங்கரர்

நன்முனைப்பால் மொழி பெயர்ப்பு

மீ. ராஜகோபாலன்

அளிக்கும் நிதியாவும் அறப்பணிக்கே

All proceeds to charity

Rs. 40/-

ISBN: 978-1-910528-03-7

August 2014

Meenalaya
28, Kingsfield Ave
Harrow, HA2 6AT
United Kingdom

Email: rajjag@gmail.com
www.meenalaya.org

விதைத்தது முளைக்கவும் வளர்த்தது பழுக்கவும்,
சுவைத்தது பயக்கவும் சுகம்தரும் முதலே!

குறிப்பு

ஸம்ஸ்கிருதச் சொற்களின் தமிழ் வார்ப்புக்களில், சரியான உச்சரிப்புக்கு உதவும் பொருட்டு, சில எழுத்துக்களுக்குக் கீழே காணும் எழுத்துக்கள் கொள்ளப்பட்டன.

ख	$க_2$ (சகதி)	ग	$க_3$(ராகம்)	ठ	$ட_2$ (பட்டம்)
च	ச (மிச்சம்)	छ	$ச_2$ (சாறு)	ड	$ட_3$ (குடம்)
श	ஶ (ஸ்ஷிவம்)	ष	ஷ (புஷ்பம்)	थ	$த_2$ (மதம்)
फ	$ப_2$ (பருப்பு)	ब	$ப_3$ (இன்பம்)	द	$த_3$ (பாதம்)
घ	$க_4$ (ராகவன்)	स	ஸ (ஸர்வம்)	ज	ஜ (ஜன்னல்)
ध	$த_4$ (தனம்)	भ	$ப_4$(பயம்)	ह	ஹ (ஆஹாரம்)

ஓம் குருப்யோ நம:



நான்யார் கேள்வியதே வேள்வியாக

நயந்தமா முனிவன் நல்லடிகள் வாழ்க

ஓம் ஶ்ரீ குருப்யோ நம:

|| श्री तक्षिणामूर्त्ति स्तोत्तिरम्||

Sri Dakshinamurti Stotram

by Sri Adi Sankara

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்

ஆதி சங்கரர்

பணிவுரை

ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் என்பது, பகவான் ஆதி சங்கரர் அருளிய துதிப்பாமாலை. இந்நூல் தக்க குருவின் தயவால் பொருளுணர்ந்து போற்றிப் படித்துணர வேண்டிய மறை விளக்கம்.

பொதுவாக, 'ஸ்தோத்திரம்' எனும் சொல்லுக்கு இறைவனைப் போற்றிப் பணிகின்ற பாடல் என்பதே பொருள். அத்தகைய ஸ்தோத்திரப் பாடல்கள், பக்தி சார்ந்து, இறைவனைப் போற்றுகின்ற புகழ்ச்சியாகவும், வணங்குகின்ற இறைஞ்சலாகவுமே இருக்குமேயன்றி, வேதாந்த விசாரம் எனும் மறைபொருள் ஆய்வினைத் தருவதற்காக இருப்பதில்லை.

ஆனால், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் எனும் இந்தப் பத்துப் பாடல்களும், துதிப்பாடல்களாக மட்டும் அல்லாது, ஆழ்ந்த உபநிடதக் கருத்துக்களைச் சுமந்து இருக்கும் ஞானப் புதையலாக விளங்குகின்றன. எனவேதான் இப்பாடல்களால் பயன்பெற, ஞான வேட்கையும், இறை பக்தியும் கொண்டு, தக்க நற்குருவினை அடைந்து, தெளிவுற உணர்வது அவசியமாகின்றது. அத்தகைய தேடலை உடைய அன்பர்களுக்கு ஓர் துணையாக இருக்க வேண்டும் எனும் பேராசையினாலேயே, இப்பெரு நூலுக்குத் தமிழ் வடிவிலான இச்சிறு முயற்சி, இறையருளால் கனிவுற்றது.

‘ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி’ எனும் திருநாமத்தில் மூன்று சொற்கள் உள்ளன. ‘ஸ்ரீ’ எனும் முதற்சொல்லுக்கு மாயை எனும் தன்னுடைய பரசக்தியைத் தன் கட்டில் வைத்திருப்பவர் என்பது ஒரு பொருள். ‘தக்ஷிணா’ எனும் சொல்லுக்குத் தெற்குத்திசை என்றும், ‘மூர்த்தி’ என்பதற்கு வடிவம் என்றும் பொருள். அதனால், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி எனும் திருநாமம், மாயா சக்தியை ஆட்கொண்டு, தென்திசை நோக்கி அருள் தந்து அமர்ந்திருக்கும் ஈஸ்வரன் எனக் காட்டுகின்றது.

அந்தகன் எனும் மரண தேவனுடைய திசை தெற்கு என்பது மறையோர் மரபு. அதனால் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, அந்தகன் இருக்கும் திசை நோக்கி அருள் பாலிப்பதால், மரணம் எனும் காலக் கட்டுப்பாட்டினை அவிழ்த்தெறியும் பர அறிவினைத் தருபவரும், மாயையாகிய பரசக்தியைத் தன்னுடன் கொண்டவரும் ஆகிய ஈஸ்வரன் என்றும் பொருள் தெளிகின்றது.

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி எனும் சொல்லை, வடமொழி விதிப்படி, ‘ஸ்ரீ’, ‘தக்ஷிண:’ மற்றும் ‘அமூர்த்தி’ என்றும் கொள்ளலாம். ‘தக்ஷிண:’ என்ற சொல்லுக்கு தேர்ந்த திறமைசாலி என்பது பொருள். அதனால் இங்கே ஒரு திறமைசாலியைப் பற்றிப் பேசப்படுகிறது என்றும் கொள்ளலாம். எதில் திறமைசாலி? படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்து செயல்களைச் செய்து அருளும் ஒப்பற்ற திறமைசாலியாக ஈஸ்வரன் இருக்கின்றான் என்பதையே இப்பெயர் காட்டுகின்றது.

செயலற்ற பரப்பிரம்மமே, ஈஸ்வரனாகச் செயலாற்றுகின்றது என்பது எதனால்?

ஒன்றேயாகிய பரப்பிரம்மம், தனது சக்தியாகிய மாயை அல்லது பராசக்தியைத் துணையாகக் கொண்டு ஐந்து செயல்களையும் ஆள்பவனாக இருக்கும்போது, ‘ஈஸ்வரன்’ என்று ஆகிறது. ‘ஸ்ரீ தக்ஷிண:’ எனும் சொற்பகுதி, இவ்வாறு மாயையுடன், திறமைசாலியாக, ஈஸ்வரன் ஐந்தொழிலைச் செய்பவர் என்று காட்டுகின்றது. இவ்வைந்து தொழில்களும், அன்னை பராசக்தியின் விளையாட்டிற்காகவே நடக்கிறது என்பதும் ‘லலிதா சஹஸ்ரநாம ஸ்தோத்திரம்’ காட்டும் உட்கரு.

ஆனால், மாயையைத் தன் கட்டில் வைத்திருக்கும் ஈஸ்வரன், அதேசமயம் உருவங்களற்ற, குணங்களற்ற பரப்பிரம்மமாகவும் இருக்கிறார். இதனையே ‘அமூர்த்தி’ என்ற சொல் காட்டுகின்றது. சக்தியுடன் கூடிய ஈஸ்வரனே, உண்மையில், ஈரற்ற பிரம்ம தத்துவம் என்பதும் இத்திருநாமத்தினால் தெளிகின்றது.

எனவே ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் என்பது, எல்லா வடிவமும், கலைகளுமான சிவசக்தியினரைத் துதிக்கும் பாடல்களாகவும், அதே சமயம், குணங்களோ, வடிவங்களோ அற்ற (நிர்க்குண, அருவமான) பரப்பிரம்மத்தை வேதாந்த விசாரமாகப் பணிந்து, அப்பேருண்மையை ஆய்கின்ற பாடல்களாகவும் ஆகின்றது. அதனால்தான், பாடற்பயன் விளக்கமான பத்தாவது பாடலில், இத்தோத்திரங்களைப் பொருளுணரக் கேட்டுப் படித்துச் சிந்தித்து, எப்பொழுதும் அதன்படி நடப்பவர்களுக்கு, பரப்பிரம்ம தத்துவத் தெளிவும், முக்தியும் கிடைக்கும் என்று மட்டுமில்லமால் இடைப்பயனாக, அட்ட சித்தியும், நவநிதியும் தடையின்றிக் கிடைக்கும் என்றும் காட்டப்பட்டன.

இப்பாடல்களின் நோக்கத்தை அறிமுகமாகச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வது, அவற்றின் நுணுக்கத்தை ஆழ்ந்து பயில்வதற்கும், நல்லாய்வு செய்தற்கும் துணையாகும்.

பகவான் ஆதி சங்கரர், வேதாந்தத்தில் மறைந்து விளங்கும் பேருண்மையான ‘ஈரறுமெய்’ எனும் அத்வைத தத்துவத்தை எடுத்தோதி, தாம் வாழ்ந்த காலத்தில், தவறானதாயோ, குறைகளுற்றதாயோ, முழுதும் நிறைவற்றதாயோ விளங்கிய பலவித சமய நெறிகளை நல்வழிப்படுத்தும் பொருட்டு, கருணையால் வாதிட்டு, அகண்ட பாரத நாடெங்கும் நல்லுண்மையான ஞான தீபம் ஏற்றி அருளியுள்ளார். அன்னாரின் தீபம் இன்றும் என்றும் வழிகாட்டும் ஒளி விளக்கு.

வேத சாரமாகிய பெருங்கடலின் தத்துவ விசாரணைகளும், விளக்கங்களும் கொண்டதான அத்வைதப் பெருநெறி, நமக்கு முக்கியமான இரு தீர்வுகளைத் தருகின்றது.

முதல் தீர்வு ‘**பிரம்மம் சத்யம், ஜகந் மித்யா**’ என்பதாகும்.

இதில் இரண்டு ஆழ்ந்த கருத்துக்கள் உள்ளன. ஒன்று பிரம்மம் எனும் இறைசக்தியின் உண்மை, மற்றது ஜகம் எனும் உலகங்களின் தன்மை.

'பிரம்மம்' என்பது பரம்பொருள் அல்லது இறைவனைக் குறிப்பது. எது மாறாமல், தொடர்ந்து, எப்பொதும் நிலைத்து இருக்கிறதோ அதுவே 'சத்தியம்' என்பது. எனவே '**பிரம்மம் சத்யா**' என்பதன் பொருள் இறைவன் எவ்வித மாற்றங்களும் இல்லாமல், எப்போதும் தொடர்ந்து இருக்கும் உண்மை. அது 'உள்ளது'. இத்தீர்ப்பை வேதங்களைச் சார்ந்த எல்லாச் சமய வழிமுறைகளும் உண்மையாக ஏற்றுக் கொண்டுள்ளன. கிறிஸ்தவம், இஸ்லாம் முதலான வேதங்களைச் சாராத பிற மதங்களும் கூட இவ்வுண்மையை ஏற்றுக் கொள்வன. எனினும், வேதங்களைச் சாராத மதங்களில் சில, முக்கியமாக புத்த மதம், சூன்ய வாதம் எனும் 'ஒன்றுமே முடிவில் இல்லை' எனும் கோட்பாட்டினைக் கொண்டு, அதனால் சத்தியமான பொருள் என எதுவுமே இல்லை என்று தீர்மானிக்கிறது.

இரண்டாம் கருத்தான '**ஜகந் மித்யா**' என்பதன் பொருள் 'உலகம் ஒரு தோற்ற மாயை' என்பது ஆகும். இக்கருத்தை வேதங்களைச் சார்ந்த மற்ற சமய நெறிகள் முற்றிலும் ஏற்கவில்லை. அது போலவே கிறிஸ்தவம், இஸ்லாம் முதலான மதங்களுக்கும், மத சார்பற்ற கொள்கை உடையவர்களுக்கும், 'உலகம் ஒரு தோற்ற மாயை' எனும் கருத்து ஏற்று கொள்ள முடியாததாய் இருக்கிறது.

சூன்ய வாதம் கொண்ட புத்த மதம் 'உலகம் பொய்' எனும் கோட்பாட்டினைக் கொண்டு இருக்கிறது. இது கிட்டத்தட்ட அத்வைத கருத்துக்கு அருகிலிருந்தாலும், 'பொய்' என்பதற்கும், மித்யா அல்லது 'தோற்ற மாயை' என்பதற்கும் வேறுபாடு இருப்பதனால், சூன்ய வாதிகளும், 'ஜகந் மித்யா' என்பதை ஏற்க மறுத்தவர்களாகவே ஆவார்கள்.

'பொய்' என்பது எப்பொழுதும் இல்லாதது. 'மித்யா' என்பது அனுபவத்தில் இருப்பது போல் தோன்றுவது. நிலையற்ற அனுபவங்களுக்குள் உண்மையாகத் தெரிவது எனினும், சத்யமல்லாதது. கால, தேசப் பரிமாணங்களால் மாற்றவும் அழியவும் உட்படுத்தப்பட்டது.

‘மித்யா’ எனும் சொல்லை எம்மொழியிலும் தக்க மாற்றம் செய்வது கடினம். சத்தியம் அல்லாதன எல்லாம் மித்யா எனக் கொள்வதே மித்யா எனும் சொல்லின் பயனை உணர வழி.

எளிய உதாரணங்கள் உதவக் கூடும்.

முயலின் கொம்பு என்பது பொய். ஏனெனில் அது யாருடைய அனுபவத்திலும் இல்லை. கனவில் காணும் புலி, கனவு அனுபவத்தின் போது மட்டுமே ஏற்றுக் கொண்ட உண்மை, ஆனால் விழித்த போது பொய். எனவே கனவுப்புலி ஒரு மித்யா என்றாகும்.

வேதாந்தம் காட்டும் மற்றுமொரு உதாரணம், கயிற்றைப் பாம்பென நினைத்து மருளும் அனுபவம். அந்த அனுபவத்தின் போது, பாம்பு இருப்பது உண்மை; ஏனெனில் அவ்வனுபவம், உண்மையில் பாம்பு ஏற்படுத்தும் பயம் முதலான எல்லா விதமான அனுபவங்களையும் கொடுக்கின்றது. ஆனால், அது வெறும் கயிறு என உணரும் போது, பாம்பு என்பது பொய்யாகி விடுகிறது. எனவே கயிற்றில் காணும் பாம்பு ஒரு மித்யா.

அத்வைதம் அவ்வாறே விரித்து, நமது அனுபவ உலகங்கள் எல்லாமே மித்யா அல்லது தோற்ற மாயை எனக் காட்டுகிறது. இதனை ஏற்றுக் கொள்வது பலருக்கும் எளிதல்ல. நாம் பார்த்து, தொட்டு, ருசித்து, அனுபவித்து வரும் உலகமும், பொருட்களும் எப்படி மித்யாவாகும்? அவை உண்மையாகத் தானே இருக்கின்றன? விழிப்பு நிலை அனுபவங்களை எப்படிக் கனவுலக அனுபவங்களுக்கு உதாரணமாய்க் காட்ட முடியும்?

இம்மாதிரியான கேள்விகள் நமக்கு எழுவது இயல்பே. ஏனெனில் ‘விழிப்புலகே சத்தியம்’ என்ற தவறான ஆனால் அழுத்தமான நம்பிக்கையில்தான் நாம் உலகிலே வாழ்ந்து வருகிறோம்.

புற அறிவியல் முறைகளும் அப்படித்தான். உலகங்கள் ‘ஏன்’, ‘எப்படி’ வந்தன எனும் கேள்விகளாலேயே ஆய்வுகள் செய்யும் புற அறிவியல், நம்மை மேலும் மேலும் மிரள வைக்கும் தோற்ற மாயைகளுள் ஆழ்த்தி, அணைத்து, இழுத்துச்

செல்லுவதாகும். புற அறிவியலைப் போன்றதல்ல, அக அறிவியலாகிய வேதாந்தம். இங்கே முக்கியக் கேள்வி, ‘இவை எல்லாம் யாருக்காக’ என்பதுதான். அப்படி ஆயும் போது, அக்கேள்வியின் விடைகளும், தொடர் வினாக்களும், மேன்மேலும் நம்மை நாமே அறியும் ஆத்ம தத்துவத்தில் ஆழ்த்தி ‘நான் யார்’ எனும் ஞான வேள்வியில் சேர்த்து, அத்வைதத் தீர்வாகிய பேருண்மையில் விடையாக முடியும்.

‘நான் யார்’ எனும் ஞான வேள்வியினைச் செய்ய, மனிதர்களாகிய நாமெல்லோருமே உரிமையும், கடமையும் கொண்டிருக்கிறோம் எனக் காட்டிக் கொடுத்த வள்ளல் பகவான் ரமண மகரிஷி.

நமக்கு வரும் மற்றொரு ஐயம், ‘சரி, உலகம் மித்யா எனில், மனிதர்களாகிய நாம் உலகில் இருப்பதால், நாமும் மித்யா அல்லது தோற்ற மாயை ஆகிவிட்டோம் என்று ஆகிறதே’ என்பது! இதை எப்படி ஏற்பது? இதற்கும் நாம் கனவுலகை ஒரு எடுத்துக் காட்டாகக் கொள்ள வேண்டும். கனவில் நாம் நமக்குள்ளேயே, பலரையும் பல பொருட்களையும் சமைத்து. அதனூடே, நம்மையும் நாமே படைத்து, கனவுலக அனுபவத்தைக் கொள்கிறோம். கனவு, விழிப்புற்ற உடனே பொய்யாகி விட்டது என்றாலும், கனவில் இருந்த நாம், நம்மைப் பொய்யாக ஏற்பதில்லையே! அதனால், மித்யா எனும் தோற்ற மாயையினுள்ளும் சத்யத்தின் வெளிப்பாடு இருக்க முடியும் என்று ஆகிறதே!

இதனைப் புரிந்து கொள்ள, தோற்ற மாயை என்பது, ஓர் உண்மையின் மேல் ஏற்றி வைக்கப்பட்ட (super-imposed) பொய் என நாம் அறிய வேண்டும். அதாவது, தோற்ற மாயை எனில், அதற்கு ‘அதிஷ்டானம்’ அல்லது ஆதாரம் என ஒன்று உண்மையாக இருக்க வேண்டும்.

மித்யாவாகிய கனவுப்புலியினை ஏற்றி வைக்க மனம் எனும் ஆதாரம் இருப்பது போல, மித்யாவாகிய கயிற்றுப்பாம்பினை ஏற்றி வைக்கக் கயிறு எனும் ஆதாரம் இருப்பது போல, மித்யாவாகிய அனுபவ உலகங்களை ஏற்றி வைக்க ஆத்மா எனும் மெய்ப்பொருள் எல்லா உயிர்களுக்குள்ளும் இருக்க வேண்டும். உயிர்களெல்லாம் ஜீவராசிகள் எனப்படும். ஜீவன்

என்பது மனிதர்களாகிய நம்முள் உயிர்த்திருக்கும் ஆதாரம். ஜீவாத்மா எனும் சொல்லால், ஜீவனாகிய உயிர்களுக்குள் ஆதார சத்தியமாக விளங்கும் ஆத்ம தத்துவம் என்று கொள்ள வேண்டும்.

சூன்யவாதத்தைக் கொண்ட நெறிகளும், பொருள் சார்ந்து பகுத்தறியும் அறிவியலும் (objective science) தவிர, மற்ற எல்லா நெறிகளும், உயிர்களுக்குள் ஆத்மா ஒன்று இருப்பதை ஏற்கின்றன. அதனை உயிர் என்றும், ஆழ் மனம் என்றும் பல பெயர்களிட்டும், குணங்களிட்டும் அழைத்தாலும், ஏதோ ஒரு ஆழ் சக்தியே சடப் பொருளுக்குள் உயிர்த்திருக்கிறது என்பதை ஏற்கின்றன.

அத்வைதத்தின் அடுத்த முக்கியமான தீர்வு. '**ஏகம் ஏவ அத்வைதம் சத்யம்**' என்பது. அதாவது, சத்தியம் என்பது ஒன்றே, அது ஈரற்றமெய் எனும் தீர்வு. 'த்வைதம்' என்பதன் பொருள் 'இரண்டானது' என்றால், அதற்கு மாற்றாக, ஏன் 'ஏகம்' அல்லது 'ஒன்று' எனச் சொல்லி இருக்கக் கூடாது? எதற்காக அத்வைதம் அல்லது ஈரற்றது எனச் சொல்ல வேண்டும்?

வேறொன்றும் இல்லை என்றால், ஒன்று என எண்ண ஏதுமில்லையே? மேலும் ஒன்று எனச் சொன்னால், அது பல இருப்பதாகவும் காட்டக் கூடும். உதாரணமாக, ஒன்று கூட்டினால் இரண்டாக முடியும். ஒன்றைப் பிரித்துப் பல பின்னமாக்க முடியும். எனவேதான் ஈரற்றது என அழைப்பதன் மூலம், சத்தியம், பலவாகக் கூட்டப்படவோ, பிரிவாக வகுக்கப்படவோ ஆகாமல் இருக்கிறது எனச் சுட்டிக் காட்டப்பட்டது. சம்ஸ்கிருத மொழி வழக்கின்படி, 'அ' எனும் எழுத்தினை 'த்வைதம்' எனும் சொல்லொடு சேர்த்து அத்வைதம் என வேதாந்தத்தில் விளக்கப்பட்டது.

'பிரம்மம் சத்யம்' எனும் முதல் தீர்வினோடு 'ஏகம் ஏவ அத்வைதம் சத்யம்' என இணைத்துப் பார்த்தால், எங்கெல்லாம் சத்தியத்தின் வெளிப்பாடு பரவிக் கிடக்கிறதோ, அவை எல்லாம் வேறல்ல, ஈரற்றமெய்யான பிரம்மத்தின் வெளிப்பாடு என்று தானே ஆக வேண்டும்! அப்படியானால், ஜீவன் எனும் ஆத்ம தத்துவம், ஈஸ்வரன் எனும் பர ஆத்ம

தத்துவமே ஆகும் அல்லவா! அதாவது ஈஸ்வரனே ஜீவனாக எங்கும் உயிர்த்திருக்கிறது.

‘தத் த்வம் அஸி’ அதாவது ‘அது நீயாக இருக்கிறாய்’ எனும் வேத மஹா வாக்கியமும் இந்த ஜீவ-ஈஸ்வர உறவினைச் சுட்டிக் காட்டுவதாய் இருக்கிறது.

‘த்வம்’ எனும் பதம் உயிர்த்திருக்கும் ஜீவர்களைக் குறிக்கின்றது. தாம் மட்டுமே எப்போதும் உள்ளதாக இருக்கின்ற, சத்தியமாகிய பரம்பொருளே படைத்த உலகங்களுக்கு மூல காரணமாகவும், அவ்வுலகங்களுக்கு மூலப்பொருளாகவும் இருக்கிறது. எனவே எல்லா உலகங்களும், உயிர்களும் மூல காரணமும், மூலப் பொருளாகவுமான பிரம்மத்துள் அடக்கம். நாம் கனவில் படைக்கின்ற அனுபவ உலகங்கள் எல்லாம், நம்மாலேயே நம்முள்ளே தோற்றுவிக்கப்பட்டு, அழிக்கப்படுவது போலவே, ஈஸ்வரனது மாயையினாலேயே எல்லா உலகங்களும், உயிர்களும் தோற்றுவிக்கப்பட்டு ஐந்தொழிலால் ஆளப்படுகின்றன.

பிரம்ம தத்துவ வெளிப்பாடான ஈஸ்வரனே (தத்), ஆத்ம தத்துவ வெளிப்பாடான ஜீவன் (த்வம்) ஆகிறான் என்பதையே ‘அஸி’ என்னும் சொல் சுட்டிக்காட்டி, ஜீவ-ஈஸ்வர உறவினை விளக்குகின்றது. இதுவே ‘தத்வமஸி’ எனும் பெருவாக்கியத்தின் சுருக்கமான பொருள்.

இந்த மஹா வாக்கியத்தினைக் கருவாகக் கொண்டே, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் முதல் மூன்று பாடல்களும் அமைந்துள்ளன.

முதல் பாடல் ‘த்வம்’ எனும் சொல்லினை, ஜீவனுக்கும், ஜகத்துக்கும், அதாவது நமக்கும், நமது அனுபவ உலகங்களுக்கும் உள்ள உறவினைக் காட்டி விளக்குகின்றது.

இரண்டாம் பாடல் ‘தத்’ எனும் சொல்லினை, ஈஸ்வரனுக்கும், ஜகத்துக்கும் உள்ள உறவினைக் காட்டி விளக்குகின்றது.

மூன்றாம் பாடல் ‘அஸி’ எனும் சொல்லின் பொருளாக, ஈஸ்வரனே ஜீவனாக உயிர்த்துள்ள உண்மையை விளக்குகின்றது.

‘தத்வமஸி’ எனும் மஹா வாக்கியத்தின் பொருள் ‘ஜீவனே கடவுள்’ என்பதல்ல, ‘**கடவுளே ஜீவன்**’ என்பது, இது ஒரு முக்கியப் பாடம்.

நாலாம் பாடலில், பகவான் ஆதி சங்கரர், ஒன்றேயான ஆத்மா ‘சத்’ என எப்போதும் உள்ள பொருளாய் எதிலும் விளங்குவது போலவே, ‘சித்’ என எப்போதும் ஒளிரும் ஞானமாய், அந்த ‘சத்’ பொருளுடன் பிணைந்த ‘சித்’ பொருளாய், அதாவது ‘சத்சித்’ வடிவமாய் இருக்கிறது எனக் காட்டுகின்றார்.

சத் என்பது ‘உள்ளது’. சித் என்பது ‘உணர்வது’. உள்ளது எதுவென உணர்வது ஞானம். அந்த ஞானம் இல்லை எனில், இருப்பினை உணர்வது எப்படி! எனவே சத்தும், சித்தும் பிரிக்க முடியாததாக, ஆத்மாவே எங்கும் விளங்குகின்றது. இதற்குப் பல துளைகளுள்ள குடத்தில் ஒளிரும் ஒரு விளக்கினை ஆத்மாவிற்கு உதாரணம் என்று காட்டி, பகவான் ஜீவாத்ம தத்துவத்தைக் காட்டுகின்றார்.

ஐந்தாம் பாடலில், படைத்த உலகங்கள் மித்யா எனவும், அதன் ஆதாரமாகிய ஆத்மா சத்தியம் எனவும் ஆனதால், எது ஆத்மா, எது ஆத்மா அல்லாத (அநாத்மா) தோற்ற மாயை என நாம் உறுதிப் படுத்திக் கொள்வது முக்கியம் எனவும் பகவான் காட்டுகின்றார். பகுத்தறிவினால், தொகுத்துணரல் அவசியம் என்பதே இப்பாடலின் கரு.

ஆறாம் பாடல், ஆத்ம தத்துவத்தை வாதிக்கும் ஒரு வலிய கருத்துக்குப் பதிலாக அமைகிறது. விஞ்ஞான தத்துவம், சூன்ய தத்துவம் எனுமிரு வழிகளில் ஆராய்ந்த புத்தம், மற்றும் அதனைச் சார்ந்த மதங்கள், ‘உலகம் பொய்’ எனவும், அதனால் தூக்கத்தில் ஒன்றுமிலாதது போலவே, முடிவில் ஒன்றுமில்லை எனக் கூறி, ஆத்ம தத்துவத்தை விலக்குகின்றன. இதன் பொய்மையைச் சுட்டிக் காட்டி, ஆத்ம தத்துவத்தை நிறுவுகின்றது இப்பாடல்.

ஏழாம் பாடல், ‘நான்’ எனும் அஹங்காரம் வேறு, ‘நான்’ எனும் ஆத்மா வேறு என்பதை உணர்த்துகின்றது. ‘நான்’ எனும் அஹங்காரம் தீயதன்று எனினும், அது மாயத் தோற்றத்தைப் பிழையாகத் ‘தான்’ என்ற ஏற்றதினால், ‘ஆத்மாவாகிய நான்’

எனும் பேருண்மையை விட்டு விலகி இருக்கின்றது. இப்பிழையைத் தவிர்க்கத் தெளிவு தருவதே இப்பாடல்.

எட்டாம் பாடல், ஈரற்றமெய்யாம் அத்வைத நெறியினை மீண்டும் ஒரு முறை ‘உலகம் தோற்ற மாயை’ என நிறுவி முடிக்கிறது. நம்முள் ‘நான் ஆத்மா’ என உணருதல் மிக முக்கியம் என்றாலும், முன்னே விரிந்த உலகங்கள் ‘தோற்ற மாயை’ என உணருவது அதை விட முக்கியம். ஏனெனில், பரந்த உலகமே நம்மைப் பல திசைகளிலும் இழுப்பது. எனவே, ‘ஜகந் மித்யா’ எனும் கோட்பாட்டை மீண்டும் உறுதி செய்கிறது இப்பாடல்.

ஒன்பதாம் பாடல் நம் எல்லோருக்கும் அவசியமான கருத்தினைத் தருவது. அத்வைதம் புரியவில்லையே, அல்லது அதன் தீர்வினை முற்றும் ஏற்க முடியவில்லையே என்று நாம் நினைப்போமானால், அதனால் தவறில்லை. அத்வைதக் கருத்துக்கள் மிக நுணுக்கமும், முதிர்ச்சியும் கொண்டவையாக இருக்கின்றன. எனவே, பகவான் ஆதி சங்கரர், முதல் எட்டுப் பாடல்களைப் புரிந்து கொள்ளவில்லை என்றாலும், இந்த ஒன்பதாம் பாடலில், மிக எளிதாக, எல்லோராலும் இனிதாக ஏற்றுக் கொள்ளத்தக்க, அவசியமான வழியினை அளிக்கின்றார். அது, பார்க்கும் உலகை, உயிரை எல்லாம், இறைவனாகப் பார் என்பதே ஆகும். அப்பார்வையினாலேயே, நம்முள் பக்குவம் விழுந்து, முளைத்து, வளர்ந்து, ஈரறுமெய்யான அத்வைத தீர்வுகள் தெளியும்.

பத்தாவது பாடல், இத்துதிகளைப் பொருளுணர்ந்து படித்துக் கேட்டு, ஒழுகி வருபவர்கள் அடையும் நற்பலன்களை உறுதி செய்வதாக அமைந்து, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் எனும் இந்நூல் நிறைவு அடைகிறது.

இந்நூலின் மற்றொரு சிறப்பு, பாடலின் தலைவனான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை, பாடலாசிரியர் அணுகுகின்ற முறை. பகவான் ஆதி சங்கரர், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை ஓர் ஜீவனாகவே பார்த்து, பிறகு அந்த ஜீவன், பழுத்த ஆத்ம ஞானத்தை அடைவதன் மூலம், ஜீவ-ஈஸ்வர ஐக்கிய அனுபவப் பெருநிலையை அடைந்ததாகவும், அப்பெருநிலையை,

தம்மை வேண்டி அடைவோருக்குக் கருணையால் நேரடியாகக் காட்டித் தருவதற்காக, சின்முத்திரையுடன் அமர்ந்து மௌனத்தால் ஜகத் குருவாக விளங்குவதாகவும் பொருள் கொள்ளும்படியாக இப்பாடல்களை அமைத்துள்ளார். உருவ வடிவில் இருக்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியாகிய ஈஸ்வரனை, ஜீவனாக இருந்து, ஜீவ-ஈஸ்வர ஐக்கியத்தை உணர்ந்து, உணர்த்தி அருள் பாலிக்கும் ஆதிகுருவாகக் காட்டும், பகவான் ஆதி சங்கரரும், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியாகிய ஈஸ்வரனது திருஅவதாரமே என்பதிலும் ஐயமில்லை.

மிக உயர்வான இப்பாடல்கள் அத்வைத வேதாந்த ஆழ்கடலுக்குள் நம்மை ஆழ்த்தி, முக்தியாகிய முத்தினை எடுத்துத் தரவல்லன. ஆழ்பொருள் விளக்கங்கள் இப்பாடல்களில் ஏராளம். அதனாலேயே, பகவான் ஆதி சங்கரரின் முதன்மைச் சீடர்களில் ஒருவரான ஸுரேசுவராசாரியர் எழுதிய ‘மானஸோல்லாஸம்’ எனும் விளக்க நூல் முதலாக, பல பெரிய சான்றோர்களும், ஆய்வும், விளக்கங்களும் கொடுத்துள்ளார்கள். இன்றும் பல பெரியோர்களும், இப்பாடல்களுக்கு நல்விளக்கங்களைத் தருகிறார்கள். அத்தகைய குருமார்களைத் தேடிப் பணிந்து, நாடிக் கனிந்து, இப்பாடல்களின் உட்பொருளைப் பெறுதலே உய்யும் வழி என்பதால், அடியேன் இங்கு தமிழாக்கிக் காட்டிய பாடல்கள், நன்முனைப்பால் கொடுக்கப்பட்ட நந்நூல் அறிமுகம் என்றே கொள்ளத் தகும்.

இப்பாடல்களை மொழிபெயர்த்தளிக்க அருளமைத்த இறைவனுக்கும், ஸ்ரீ சங்கராச்சாரிய குருமார்களின் பாதார விந்தங்களுக்கும் கோடிப் பணிவார்ந்த நமஸ்காரங்கள்.

மீ. ராஜகோபாலன்

2 ஜூலை 2014

ஓம்

யோ ப்$_3$ரஹ்மாணம் வித$_3$தா$_4$தி பூர்வம்
யோ வை வேதா$_3$ம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை |
தம் ஹ தே$_3$வமாத்மபு$_3$த்$_3$தி$_4$ப்ரகாஶம்
முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்$_3$யே ||

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி:

உலகெலாம் படைத்த தேவை
உணர்மறை வழுத்துங் கோவை
நலமதாய்ப் பணிந்து ஏற்றேன்
நற்துணை உறுதி காட்டி

பரமதாம் பிரம ஞானப்
பகலொளி அறிவில் சூடித்
திறனதால் தெளிவில் ஏற்றும்
தெய்வமே போற்றி போற்றி

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பாடல் – 1

விஶ்வம் த$_3$ர்பணத்$_3$ருஶ்யமானனக$_3$ரீதுல்யம் நிஜாந்தர்க$_3$தம்
பஶ்யன்னாத்மனி மாயயா ப$_3$ஹிரிவோத்$_3$பூ$_4$தம் யதா$_2$ நித்$_3$ரயா |
ய: ஸாக்ஷாத்குருதே ப்ரபோ$_3$த$_4$ஸமயே ஸ்வாத்மானமேவாத்$_3$வயம்
தஸ்மை ஶ்ரீகு$_3$ருமூர்தயே நம இத$_3$ம் ஶ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே ||1||

கண்ணறியும் ஆடியினுள்
கவிநகரம் பிம்பமெனக் – கண்டபோது
முன்விரியும் புவிஎனவும்
மூலமிறை யாமெனுவும் – முனிதல்போல

தன்புலனும் பலவடிவும்
தடவுலகும் வேறுஎனத் - தந்தசூதும்
உள்மனமும் மாயவலை
உல்குதுயி லாலென்றே – உணரமாறும்

பின்தெளியும் விடியுமது
பிரம்மமதே ஆத்மனெனப் - பிரிவுஇல்லாப்
பேரருளை ஓர்பொருளாய்
நேர்முகமாய்ப் பார்ப்பனென – நிறைவதான

வண்ணமுடை வடிவநெறி
வைத்துவளர் பரமாத்ம – உருவமாகும்
முன்னகுரு தக்ஷிணா
மூர்த்தியிது நற்பணிவு – முழுமையாமே!

முதல் வரி

விஸ்வம் = உலகம்; த$_3$ர்பண: = கண்ணாடி; த்$_3$ருஶ்யமான = தெரிவதான; நக$_3$ரீ = நகரம்; துல்யம் = சமம்; நிஜ அந்தர் க$_3$தம் = தன்னுடைய உள்ளே இருப்பதான;

இரண்டாம் வரி

பஶ்யன் = பார்த்துக் கொண்டு; ஆத்மனி = தன்னிடத்தில்; மாயயா = மாயா சக்தியினால்; ப$_3$ஹிரி உத்$_3$போ$_4$தம் இவ = வெளித் தோன்றலாக; யதா$_2$ = எப்படி; நித்$_3$ரயா = துயில்வதால்;

மூன்றாம் வரி

ய: = யார்; ஸாக்ஷாத் குருதே = அறிவினால் நேரடியாய் உணரத் தெரிகிறாரோ; ப்ரபோ$_3$த$_4$ஸமயே = (விழிப்பாகிய) ஆத்ம ஞானம் உதிக்கும் சமயத்தில்; ஸ்வாத்மானம் = தன்னை; அத்$_3$வயம் = இரண்டற்றதாக;

நான்காம் வரி

தஸ்மை = அவருக்கு; ஶ்ரீ கு$_3$ருமூர்தயே = பிரம்ம ஞானமளிக்கும் குருவின் வடிவுக்கு; நம இத$_3$ம் = இந்தப் பணிவு (முழுமையாகட்டும்); ஶ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே = பிரம்ம ஞானியும், மாயை கடந்தவரும் ஆன ஶ்ரீ தக்ஷிணா மூர்த்திக்கு.

கருத்து

கண்ணாடியில் தெரியும் நகரத்தின் பிம்பத்திற்குக் காரணம், அதன் முன்னிருக்கும் உலகம் என்பதை (அவ்வுலகத்திற்கு மூலகாரணம் அதைப் படைத்த பரம்பொருள் என்பதை) உணர்வது போலவே, (அறியாமையாகிய) மாயத் துயிலினால், புலனும், அறிவும் தன்னுள்ளேயே இருக்கும் உலகங்களை, வெளியே வேறெனப் பார்த்து மயங்குகின்றது என்பதை (ஆன்ம அறிவால்) உணர்ந்து, அவ்விழிப்பு நிலையில், இரண்டற்ற ஆன்மாவையே, எது, எங்கும் காண்கின்றதோ, அந்த பரமாத்மாவாகிய முதற்குரு தக்ஷிணாமூர்த்தி வடிவத்திற்கு, இப்பணிவு முழுமையாகட்டும்.

குறிப்பு

விஸ்வம் எனும் உலகத்தை மித்யா அல்லது தோற்ற மாயை எனக் காட்ட, பகவான் ஆதி சங்கரர், முதல் வரியில் இரண்டு எடுத்துக்காட்டுக்களைத் தருகின்றார்.

ஒரு உண்மையை விளக்க, எடுத்துக்காட்டுக்கள் அவசியமே. ஆனாலும் எந்த ஒரு எடுத்துக்காட்டு மட்டும், நாம் விசாரித்துக் கொண்டிருக்கும் உண்மையைப் பற்றிய எல்லா வினாக்களுக்கும் விடை தருவதாக ஆகாது. முக்கியமாக, நாம் வேதாந்த விசாரம் அல்லது ஆய்வு செய்யும் போது, சான்றோர்கள் தரும் எடுத்துக் காட்டுக்களை, எதனை விளக்க அவ்வெடுத்துக்காட்டுக்கள் காட்டப்பட்டனவோ அவற்றின் பொருட்டே பயன்படுத்த வேண்டும். சில நேரங்களில், ஒன்றுக்கு மேற்பட்ட எடுத்துக்காட்டுகள் தேவையாக இருக்கலாம். அதனை ஒட்டியே, பகவான் இங்கே இரண்டு எடுத்துக்காட்டுக்களைத் தருகின்றார்.

முதல் எடுத்துக்காட்டு, உலகம் என்பது கண்ணாடியில் தெரியும் நகரத்தைப் போன்றது. அதாவது, உலகம், கண்ணாடியில் தெரியும் பிம்பத்தைப் போல ஒரு தோற்ற மாயை அல்லது மித்யா. அதாவது அந்த பிம்பம் இருக்கிறது (fact) ஆனால் அது சத்தியம் அல்ல (not truth).

இந்த எடுத்துக்காட்டை ஒட்டி, நாம் ஜீவனுக்கும், உலகுக்கும் உள்ள உறவினை அறிந்து கொள்ள வேண்டும்.

கண்ணாடி என்பது உலகைப் பிரதிபலிக்கும் ஆதாரமாக இருப்பது போல, ஆத்மா ஜீவனது அனுபவ உலகங்களுக்கும் ஆதாரம். அதாவது, உலகங்கள் எல்லாம் ஆத்மாவிலேயே விளங்குகின்றன. பிம்பம் கண்ணாடியைச் சார்ந்து இருப்பது போல, உலகங்கள் ஆத்மாவைச் சார்ந்தே இருக்கின்றன. ஆனால், கண்ணாடியைப் போல, ஆத்மாவோ முற்றும் சுதந்திரமாக, கட்டுப்பாடுகள் இல்லாமல் இருக்கின்றது. மேலும் அழகோ, அழகற்றதோ, நல்லதோ, தீயதோ, எதுவானாலும் அவற்றை பிரதிபலிக்கும் கண்ணாடி, தான் எந்தப் பாதிப்பும் இல்லாமல் இருப்பது போலவே ஆத்மாவும் உலகங்களின் உறவினால் பாதிப்பு எதுவும் இன்றி விளங்குகிறது.

இதனையும் தாண்டி ஆராய்ந்தால், கண்ணாடியில் தெரியும் நகரத்திற்குக் காரணமான வெளி உலகம் என ஒன்று இருக்க வேண்டுமே, மற்றும் கண்ணாடியில் தெரியும் பிம்பத்தினை பார்ப்பவன் யாரென அறியவேண்டுமே என்றெல்லாம் வினாக்கள் எழுவதால், பகவான் ஆதி சங்கரர் இரண்டாவது எடுத்துக்காட்டினையும் தருகின்றார்.

'நிஜ அந்தர் கதம்' எனத் தன்னுள்ளே இருக்கும் கனவுலகங்கள் போன்றதே விஸ்வம் எனும் வெளிஉலகம், அதாவது கனவில் ஜீவன் தனக்குள்ளேயே உலகங்களையும் உயிர்களையும் படைத்து அனுபவம் அடைவது போலவே, விஸ்வம் எனும் வெளியுலகும், ஈஸ்வரனின் மாயை எனும் கனவில் ஆக்கப்பட்டது என காட்டப்படுகிறது.

இது எப்படி முடியும்?

இவ்வரிய தத்துவம் ஆழ்ந்த விசாரணைக்குரியது.

கனவில் எப்படி அனுபவப்பொருள், அனுபவிப்பவன், அனுபவிக்கும் கருவி எனக் காரண காரியங்கள் (அதாவது மூலமும், விளைவும்) எல்லாம் ஆத்மாவிடமிருந்தே வருகிறதோ, அவ்வாறே வெளியில் காணும் உலகமும் வருகிறது.

ஜீவன் தினமும் ஏற்கும் மூன்று 'அவஸ்தா' அல்லது அனுபவ நிலைகள் - விழிப்பு, கனவு, ஆழ்துயில் என்பன. நாம் விழிப்பு நிலையையும் அப்பொழுது அனுபவிக்கும் உலகங்களையும் சத்தியம் என நினைத்திருக்கிறோம். துயில் எனும் அரிய சக்தியினால், நாம் தினமும் விழிப்புநிலை மறைக்கப்பட்டு, வெளியில் இருக்கும் உலகினை அறியாமற் போகின்றோம். அப்போது, கனவுலகம் ஒன்றைப் படைத்து, அதில் தன்னையும் அனுபவிப்பவனாகப் படைத்து, அனுபவிப்பவன், அனுபவிக்கும் பொருள், அனுபவிக்கும் கருவி என எல்லாவற்றுக்கும் மூலமாக நமது ஆத்மாவே இருக்கிறது. அந்தக் கனவுக்குள் ஒருவர் வந்து, 'இப்பொழுது அனுபவிப்பது உண்மையல்ல, கனவுதான்' என்றால், எப்படி நாம் அதை ஏற்போம்! அது அப்போதைக்கு உண்மையாகத்தானே இருக்கிறது! ஆனால், விழிப்பு அடையும் போது, அக்கனவு சத்தியம் அல்ல எனத் தெளிகின்றோம்.

வேதாந்தம், விழிப்பு நிலையில் நாம் காணுகின்ற விஸ்வம் எனும் உலகமும், மித்யா எனப் பறைகிறது. இதனை நாம் ஏற்றுக் கொள்வது முதலில் கடினம். கனவுக்குள் கனவு உண்மையாய் இருப்பது போலவே, விழிப்பில் விழிப்புலகம் உண்மையாய்த்தான் நமக்குத் தோன்றுகிறது. இதுவும் ஒரு தோற்ற மாயை என்பதுதான் பேருண்மை.

இப்பேருண்மையை உணர்பவன் ஆத்மஞானியாவன். அவனே உண்மையில் விழிப்பு அடைந்தவன்.

அப்படி விழிப்பு அடைந்தவனுக்கு, இந்த வெளிஉலகம் இருக்கிறதா என்ற கேள்வி மிக முக்கியமானது.

கனவு முடியும் போது, கனவுலகு அழிவது போல, ஆத்ம ஞானியின் ஞான விழிப்பினால், அவனுக்கு விஸ்வம் எனும் வெளி உலகம் அழிய வேண்டும் அல்லவா? அப்படித்தான் இருக்கும் எனினும், ஆத்ம ஞானிகள், உடலால் இவ்வுலகில் வாழும் வரைக்கும், விழிப்பு நிலையில் விஸ்வம் எனும் இவ்வுலகை, அது மித்யா எனத் தெரிந்தும், ஒரு கனவுபோல் பார்த்துக் கொண்டே இருப்பார்கள்.

சூரியன் என்பது உதிப்பதும் இல்லை, மறைவதும் இல்லை எனும் அறிவியல் உண்மை புரிந்தாலும், நாம் அனுபவத்தில் சூரிய உதயத்தையும், மறைவையும் பார்த்து ரசிப்பது போலவே, ஆத்ம ஞானி விஸ்வமாகிய விழிப்புலகினை, அது மித்யா எனும் அறிவுடனேயே பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறான். இந்தப் பேருண்மையை இரண்டாம் வரியில் 'பஸ்யந்' எனும் சொல் காட்டுவதோடு, அனுபவ உலகங்களைப் 'பார்த்துக் கொண்டிருப்பவனே ஜீவன்' என்னும் உண்மையையும் சுட்டிக் காட்டுகிறது.

'நித்ரயா' என்ற ஆழ் துயிலில் ஆழ்த்தும் சக்தியே விழிப்பினை மறைப்பது, மறைத்த பின் கனவினை வளர்ப்பது எனத் தோற்ற மாயைகளை ஏற்படுத்தவும், அவற்றிலிருந்து அவ்வப்போது ஓய்வு பெற்று உறங்கவும் காரணமாக இருக்கின்றது. எப்படி உறக்கத்தினால் உள்ளே இருக்கும் உலகம், கனவில் வெளியில் வருகிறதோ, அது போலவே ஈஸ்வரனது நித்ரா சக்தியாகிய மாயை, விஸ்வம் எனும் உலகங்களைக் காட்டுகின்றது.

உலகங்கள் எல்லாம் தோற்ற மாயை எனத் தெளிந்தால், எப்போதும், எங்கும் உள்ளது ஆத்மா ஒன்றே என்ற முடிவு வரும். அப்படி வருவது தான் உண்மையான விழிப்பு. இதுவே மூன்றாம் வரியில் ‘பிரபோதசமயே ‘எனப்பட்டது.

அத்தகைய ஞான விழிப்பினை அடையும் ஜீவன் எவரோ, அவரே ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி என்று காட்டிச் சொல்லில் அடங்கா அப்பேருண்மையைச் சுட்டிக் காட்டும் சின்முத்திரையுடன் விளங்கும் தக்ஷிணாமூர்த்தி வடிவத்தைப் பணிகின்றது இப்பாடல்.

ஆழ்துயிலானது ஜீவனை ஆட்கொள்ளும் சக்தி. மாறாக, மாயா சக்தி, ஈஸ்வரனால் ஆளப்படுவது.

ஆழ்துயில் அனுபவம், வேதாந்த விசாரணைக்கு மிகவும் முக்கியமான பாடம். பொதுவாக நாம் துயிலை ஒரு சோம்பலின் அடையாளமாகத்தான் பார்க்கின்றோம். ஆனால், துயில் என்பது மிகப் பெரிய வரம். அது உடலையும், மனதையும் ஆத்மா தன்னுள் ஈர்த்து, தோற்ற மாயைகளைக் கலைத்து, சுகித்து இருக்கும் நிலை. நாம் அதனை ஆத்ம விசாரத்துக்கு ஏற்ற அனுபவப் படியாகப் பார்க்க வேண்டும். இது ஆறாவது பாடலில் மீண்டும் சுட்டிக் காட்டப்படுகிறது.

பாடல் – 2

பீ$_3$ஜஸ்யாந்தரிவாங்குரோ ஜக$_3$தி$_3$த$_3$ம் ப்ராங்னிர்விகல்பம் புன:
மாயாகல்பித தே$_3$ஶகாலகலனா வைசித்ர்யசித்ரீக்ருதம் |
மாயாவீவ விஜ்ரும்ப$_4$யத்யபி மஹாயோகீ$_3$வ ய: ஸ்வேச்ச$_2$யா
தஸ்மை ஶ்ரீகு$_3$ருமூர்தயே நம இத$_3$ம் ஸ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே ||2||

வேறற்றுப் பிரம்மத்துள்
வித்துள்முளை போலுலகம் - விதித்தமாயக்
கூறுற்று பரிணாமக்
கூர்வெளியும் காலமெனக் – கோர்த்ததாகி

வேறுற்றுக் கோடிவடி
வேயுற்றுப் பேரகிலம் – விளைத்ததான
விரிவுற்ற பிரம்மத்தின்
விருப்பினால் எழுமுலகம் – மாயமாகும்

சீருற்ற தாமிச்சை
ஜெகவித்து ஆகவெறுந் - தோற்றமாக
செயலற்று மாயாவிச்
செயலாக மாயோக – சீலமான

வண்ணமுடை வடிவநெறி
வைத்துவளர் பரமாத்ம – உருவமாகும்
முன்னகுரு தக்ஷிணா
மூர்த்தியிது நற்பணிவு – முழுமையாமே!

முதல் வரி

பீ$_3$ஜஸ்ய = விதை; அந்த: = உள்ளே; இவ= இப்படி; அங்குர: = செடி; ஜக$_3$தி$_3$த$_3$ம் = இந்த உலகம்; ப்ராங் = முன்; நிர்விகல்பம் = வேறுபாடு இல்லாமல்; புன: = மீண்டும்;

இரண்டாம் வரி

மாயா = மாயையினால்; கல்பித = ஏற்றிவைக்கப்பட்ட; தே$_3$ஶகால = இடம், காலம்; கலனா = தொடர்பினால்; வைசித்ர்ய = விதவிதமான; சித்ரீக்ருதம் = வரையப்பட்டதாக;

மூன்றாம் வரி

மாயாவி இவ = மாயாவியைப் போல; விஜ்ரும்ப$_4$யத் = தோற்றுவிக்கப்பட்டது; அபி மஹாயோகி$_3$ இவ = மேலும் மஹா யோகியைப் போல; ய: ஸ்வேச்ச$_2$யா = எது தனது விருப்பத்தாலேயே;

நான்காம் வரி

தஸ்மை = அவருக்கு; ஸ்ரீ கு$_3$ருமூர்தயே = பிரம்ம ஞானமளிக்கும் குருவின் வடிவுக்கு; நம இத$_3$ம் = இந்தப் பணிவு (முழுமையாகட்டும்); ஸ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே = பிரம்ம ஞானியும், மாயை கடந்தவரும் ஆன ஸ்ரீ தக்ஷிணா மூர்த்திக்கு.

கருத்து

இவ்வுலகம் முதலில் விதையுள் முளையைப் போல, வேறற்றதாய் (பிரம்மத்துள்ளேயே) இருந்தது. பின்பு (பிரம்மத்தின் சக்தியாகிய) மாயையினால் கற்பிக்கப்பட்ட இடம், காலம் எனும் (கூரிய) பரிணாமங்களின் தொடர்பினால், வேற்றுமை அடைந்து, படிப்படியாக பலவகைப் பட்டதாக இருக்கிறது. எந்த (ஆத்மப் பொருளானது) இவ்வுலகத்தை மாயாவி போலும், மஹாயோகி போலும், தனது விருப்பத்தாலேயே (செயலில்லாமலே) தோற்றுவிக்கிறதோ, அந்த பரமாத்மாவாகிய முதற்குரு தக்ஷிணாமூர்த்தி வடிவத்திற்கு, இப்பணிவு முழுமையாகட்டும்!

குறிப்பு

முதற்பாடலிலே ஜீவனுக்கும் உலகிற்கும் உள்ள உறவினைக் காட்டி, உலகங்களுக்கு, அவற்றைப் பார்ப்பவனான ஜீவனே ஆதாரம் எனக் காட்டிய பகவான ஆதி சங்கரர், இந்த இரண்டாம் பாடலில், உலகிற்கும், ஈஸ்வரனுக்கும் உள்ள உறவினைக் காட்டி, 'தத்' எனும் சொல் விளக்கமான ஈஸ்வரனே உலகங்களுக்கு ஆதாரம் என்று காட்டுகின்றார்.

உலகில் பலரும் பல விதமான வழியிலே, உலகைப் பற்றிய ஆய்வும், உறுதியும் கொண்டு இருக்கிறார்கள். உலகம் படைக்கப்படவில்லை, அது எப்போதும் இருப்பது என்பது ஒரு சாரார் எண்ணம். உலகம் படைக்கப்பட்டது என்றும் அதைப் படைத்தது கடவுள் என்றும் ஒரு நம்பிக்கை.

கடவுள் நம்பிக்கை உள்ள எல்லா நெறிகளும், உலகம் படைக்கப்பட்டது பற்றியும், உலகுக்கும், படைப்பாளிக்கும் உள்ள உறவு பற்றியும் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன. கடவுளால் உலகம் படைக்கப்பட்டாலும், தாய் வேறு, சேய் வேறு என்பது போல் கடவுள் வேறு, உலகம் வேறு என்றும், மரமும் கொடியும் போல், கடவுளைச் சார்ந்து உலகம் இருக்கிறது என்றும், வயிற்றுள் இருக்கும் நுண்ணுயிர்கள் போல், கடவுளுக்குள் உலகம் அடங்கி இருக்கிறது என்றும், பலரும் பல விதமாகக் கருதுவர்.

மிகவும் வியக்கத்தக்க வழியில் பகவான் ஆதி சங்கரர் எடுத்துக் காட்டும் அத்வைத வேதாந்தம், உலகம் என்பது படைக்கப்படவே இல்லை எனவும், அது தோற்றத்தில் ஏற்றி வைக்கப்பட்டது போல் (superimposed) இருக்கின்றது என்றும் கூறுகின்றார்.

எதிரிலும், அனுபவத்திலும் திடமாக நாம் பார்க்கும் உலகங்கள் தோற்றத்தில் காட்டப்படும் ஓவியம் போன்றது என்பதை நம்மால் எப்படி எளிதாகப் புரிந்து கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ முடியும்! அதற்கு உதவத்தான் படிப்படியான வேதாந்த ஞான விசார முறைகளைப் பெரியோர்கள் படைத்துத் தந்திருக்கிறார்கள்.

முதற்படியாக, உலகம் படைக்கப்பட்டது எனும் தத்துவத்தை ஏற்றுக் கொண்டு, அதற்கு ஈஸ்வரனே காரணம் எனும் கருத்தினை அத்வைத வேதாந்தம் எடுத்துக் கொள்கிறது.

படைத்தல் முதலான எந்த ஒரு விளைவுக்கும் காரணங்கள் வேண்டும் அல்லவா? வேதாந்தம் எவ்விளைவுக்கும், இரண்டு முக்கிய காரணங்கள் தேவை என்று காட்டுகின்றது. முதற் காரணம் நிமித்த காரணம் அல்லது செய்வதற்கான ஆற்றல் (efficient cause) என்பது. இது அறிவு சார்ந்தது. இரண்டாவது உபாதான காரணம் (material cause) அல்லது செய்வதற்கான மூலப்பொருள் என்பது. இது சடப்பொருளானது. மூலப்பொருளும், விளைக்கும் திறனும் இருந்தால்தானே ஒரு விளைவை ஏற்படுத்த முடியும்! மற்றபடி, விளைவிப்பதற்கான கருவி, சூழ்நிலை எனப் பல துணைக் காரணங்கள் இருப்பினும், அவற்றையும் இவ்விரண்டினுள் அடக்கி விடலாம்.

உலகம் என்பது படைக்கப்பட்டது என்றால், அது ஒரு விளைவு அல்லது ‘காரியம்’. படைத்தவன் ஈஸ்வரன் என்றால், ஈஸ்வரன் ‘காரணம்’. இப்பாடலின் முதல் வரியில், இக்காரிய காரணம் காட்டப்படுகிறது. விதைக்குள் வேறுபாடுகள் ஏதுமில்லாமல், செடி அடங்கி இருந்து, பிறகு முளைத்துப் பல வேறுபாடுகளுடன் வளர்ந்து, மீண்டும் விதைக்குள் அடங்கி இருப்பது போல, ஜகத் எனும் உலகம், பிரம்மத்துளிருந்து முளைத்து, பிரம்மத்துளேயே அடங்குவதான நிலையை மீண்டும் மீண்டும் அடைகிறது என்று காட்டப்படுகிறது.

இதற்கு நிமித்த காரணம் ஈஸ்வரனே என்றும், ‘ஸ்வ இச்ச’ எனும் பதம், ‘தனது விருப்பத்தாலேயே’, ஈஸ்வரன் விளைவை ஏற்படுத்துகிறார் என, ஈஸ்வரனின் செயலுக்குக் கருவிகள் ஏதுமில்லை எனவும் காட்டுகின்றது.

பெரிய யோகியர் தமது எண்ணத்தாலேயே பலனை ஏற்படுத்துவது போல, இறைவன், தனது விருப்பம் ஒன்றினாலேயே எதனையும் தோற்றுவிக்கின்றார் என்றும் மந்திரவாதிகள் எப்படி இருப்பதை இல்லாததாயும், இல்லாததை இருப்பதாயும் காட்டுகின்றார்களோ, அதேபோல மாயையின் சக்தியினால், ஈஸ்வரன் நிமித்த காரணமாய்

இருந்து உலகங்களைத் தோற்றுவிக்கிறார் என்றும் கூறப்பட்டது.

ஈஸ்வரனது மாயா சக்தியே, உலகைப் படைப்பதற்கான உபாதான காரணமாக இருக்கிறது என இரண்டாம் வரியில் காட்டப்பட்டது. மாயையின் சக்தியால், காலம், தேசம் எனும் கட்டுக்களின் தொடர்பினால், வித விதமான வகைகளில், உலகங்கள் ஓவியங்களாக வரையப்படுகின்றன.

இவ்வாறு இப்பாடல், விஸ்வம் எனும் உலகம், இறைவனின் இச்சையினால், மாயை எனும் ஆழ்துயில் போர்த்தப்பட, காலம், தேசம் எனும் பரிமாணங்களின் தொடர்பினால் நிலையற்று எப்போதும் மாறிக் கொண்டே இருப்பனவாகத் தோற்றுவிக்கப்படுகின்றன. இதற்கு ஆதாரமாய் இருப்பது, மாயை எனும் சக்தியை ஆள்பவராக விளங்கும் ஈஸ்வரன். இதுவே ‘தத்’ எனும் பதத்தால் காட்டப்படுவது.

ஈஸ்வரன், மாயை எனும் சக்தியை ஆள்பவர். ஜீவன் மாயை எனும் சக்தியால் ஆளப்படுபவன். அறியாமை, மயக்கம் எனப் பலவாகிய மாயத்திரைகளை, ஆன்ம விசாரணையாகிய கத்தியினால் அறுத்த ஜீவன், ஆன்ம ஞானியாகி, ஜீவ-ஈஸ்வர ஒற்றுமையாகிய உயரிய அனுபவத்தைப் பெறமுடியும். அப்பெரும் பேற்றினை அடைந்து காட்டி, ஆட்கொள்ளும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு, இப்பணிவு முழுமையாகட்டும் என்பதே இப்பாடலின் கருத்து.

பாடல் - 3

யஸ்யைவ ஸ்பு$_2$ரணம் ஸதா$_3$த்மகமஸத்கல்பார்த$_2$கம் பா$_4$ஸதே
ஸாக்ஷாத்தத்த்வமஸீதி வேத$_3$வசஸா யோ போ$_3$த$_4$யத்யாஶ்ரிதான் |
யத்ஸாக்ஷாத்கரணாத்$_3$ப$_4$வேன்ன புனராவ்ருத்திர்ப$_4$வாம்போ$_4$னிதௌ$_4$
தஸ்மை ஶ்ரீகு$_3$ருமூர்தயே நம இத$_3$ம் ஶ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே ||3||

இன்னதென இலாதனவுள்
இலங்குமொளி யாமென்றே – இருந்துகாட்டி
இருத்திவுயிர் ஊட்டியவை
இயற்பில்குண மாமென்றே – இயற்கையான

தன்னதென ஞானியரில்
தன்னிலுணர் மாமறையும் – தகுவதான
தத்வமஸி தானதுநீ
தானெனவே ஆனபயன் – தருவதாகும்

எண்ணமுடி யாதுவென
ஏற்றுவுணர் வார்களதை - ஏற்பதாலே
திண்ணமுடி வார்பிறவி
தீரமுடி வார்கருவில் – திரும்பாராக

வண்ணமுடை வடிவநெறி
வைத்துவளர் பரமாத்ம – உருவமாகும்
முன்னகுரு தக்ஷிணா
மூர்த்தியிது நற்பணிவு – முழுமையாமே!

முதல் வரி

யஸ்ய ஏவ = யாருடைய; ஸ்பு$_2$ரணம் = வெளிப்பாடு; ஸத் ஆத்மகம் = உண்மை என்று எப்பொதும் விளங்குவதானது; அஸத் கல்ப அர்த$_2$க$_4$ம் = நிலையற்ற பாவனைகளுக்குள் நுழைந்ததென; பா$_4$ஸதே = தெரிகிறது;

இரண்டாம் வரி

ஸாக்ஷாத் = நேரடியாக; தத் த்வம் அஸி = அது நீ யாக இருக்கிறாய்; இதி = இவ்விதம்; வேத$_3$வசஸா = வேதாந்த வாக்கின்படி; யோ = எது; போ$_3$த$_4$யதி = விளக்குகின்ற; யாஶ்ரிதான் = அணுகியவர்களுக்கு;

மூன்றாம் வரி

யத் = எது; ஸாக்ஷாத்கரணாத்$_3$ = தெளிவாகப் புரிந்து கொண்டல்; ந ப$_4$வே = ஏற்படாது; புன: = மீண்டும்; ஆவ்ருத்தி: = பிறப்பு; ப$_4$வ = சம்ஸாரம்; அம்போ$_4$னிதௌ$_4$ =கடலில்;

நான்காம் வரி

தஸ்மை = அவருக்கு; ஶ்ரீ கு$_3$ருமூர்தயே = பிரம்ம ஞானமளிக்கும் குருவின் வடிவுக்கு; நம இத$_3$ம் = இப்பணிவு (முழுமையாகட்டும்); ஶ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே = பிரம்ம ஞானியும், மாயை கடந்தவரும் ஆன ஶ்ரீ தக்ஷிணா மூர்த்திக்கு.

கருத்து

எதனுடைய விளக்கமானது, உண்மையில் இல்லாததான பொருட்களில் எல்லாம் (உயிரொளியாய்ப்) புகுந்து (அவை) இருப்பதாகக் காட்டுகின்றதோ, எதனை அடைந்தவர்களை, தத்வமஸி எனும் ‘நீ அதுவாக இருக்கிறாய்’ எனும் வேத மஹா வாக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றனவோ, எதனைக் காண்பதால், பிறவிப் பெருங்கடலைத் தாண்டி, மீண்டும் திரும்புதல் இல்லையோ அந்த பரமாத்மாவாகிய முதற்குரு தக்ஷிணாமூர்த்தி வடிவத்திற்கு, இப்பணிவு முழுமையாகட்டும்!

குறிப்பு

முதற்பாடலில் 'த்வம்' எனும் குறிப்பால் காட்டப்படும் ஜீவனையும், இரண்டாம் பாடலில் 'தத்' எனும் குறிப்பால் காட்டப்படும் ஈஸ்வரனையும், ஜகத் எனும் உலகுடனான உறவினைக் காட்டி விளக்கிய பகவான் ஆதி சங்கரர், இந்த மூன்றாம் பாடலில், ஜீவ ஈஸ்வர உறவினைக் காட்டுகின்றார். 'தத்வமஸி' எனும் மஹா வாக்கியத்தின்படி, ஜீவனும் ஈஸ்வரனே. அதனால், இந்தப் பாடல், மஹாவாக்கியத்தின் 'அஸி' எனும் பத விளக்கமாக இருக்கிறது.

படைத்த பொருளும், படைத்தவனும் வேறாக இருப்பதுதான் நமது நடைமுறை மரபு. ஆனால், ஈஸ்வரன் தனது படைப்புக்குள்ளேயே ஊறி இருக்கிறார். இது எப்படி முடியும்?

முதற்பாடலில் காட்டிய 'கனவுலகு' உதாரணத்தில், ஜீவன் தனக்குள்ளேயே எல்லா உலகங்களையும் படைக்கிறது. அவ்வுலகங்களில் எல்லாப் பொருளும், செயலுமாக அனுபவிப்பவன், அனுபவிக்கும் பொருள் என யாதுமாய் ஊடுருவி இருக்கிறது. கனவுலகில், விழிப்புலக உண்மைகள் எதுவும் உண்மையில் இல்லை எனினும், இல்லாத பொருளுக்கும் இருப்பதாய் உயிர்கொடுத்துக் காட்டுவது ஜீவனே.

அதே போல விதவிதமான உலகங்களைப் படைத்த ஈஸ்வரன், அவற்றில் எல்லாம் கோர்த்து இலங்கி, இல்லாதவற்றையும் இருப்பதாகக் காட்டுகின்றான் என, இந்த மூன்றாவது பாடலின் முதல் வரி நிச்சயப்படுத்துகிறது.

எளிய வேதாந்த உதாரணங்கள் நமக்குச் சிறிது தெளிவு தரலாம்.

காரணம், காரியம் அதாவது மூலம், விளைவு இரண்டுக்கும் உள்ள உறவு நன்கு தெளியப் படவேண்டும். விளைவு என்பது மூலத்தின் மாறுபாடுதான். மண்ணாலாகிய பானை விளைவு என்றால், அதன் மூலமாகிய மண் அப்பானையில் ஆதாரமாய் இருக்கிறது. பானை எனும் விளைவு, மண் எனும் மூலத்தின் பெயர், உரு (நாம ரூப) மாற்றமே அல்லவா? 'பானை இருக்கிறது' எனக் கூறும் பொழுது, இருப்பதாகிய சத்தியம் காரணமாகிய மண் என்றும், காரியமாகிய பானை என்பது,

நாம, ரூப மாற்றங்களாகிய மித்யா என்றும் அறிகிறோம் அல்லவா!

அதன் பயன் என்ன? ஒவ்வொரு விளைவிற்குள்ளும், அதன் மூலம் மட்டுமே உண்மையாய் ஊடுருவி இருக்கிறது. அதனால், விளைக்கப்பட்ட உலகங்களில் காரணமாகிய ஆத்மா ஊடுருவிக் கிடக்கிறது. இதுவே முதல் வரியில் அடக்கம்.

அடுத்த இரண்டு வரிகளில், எங்கும் ஊடுருவி இருக்கும் ஈசனே (தத்) நீயாக (த்வம்) இருக்கிறாய் (அஸி) என (இதி) எவர், தன்னை அணுகிய தூய சீடர்களுக்கு, நேரடியாக உணர்பிக்கிறாரோ, அந்த தக்ஷிணாமூர்த்தியை, நேரடியாக உணர்ந்து கொள்பவருக்கு, பிறவியாகிய பெருங்கடலில் மீண்டும் மீண்டும் விழுகின்ற இடர் இருக்காது எனக் காட்டப்படுகிறது.

'தன்னை அணுகியவர்களுக்கு' எனக் காட்டியதன் நோக்கம், ஆத்ம ஞானம் என்பது திடமான அறிவும், தெளிவான மனமும் கொண்டு, உறுதியான வேட்கையுடன் விழைபவருக்கு மட்டுமே கொடுக்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கத்தான்.

அதே போல நற்குரு என்பவர், 'நேரடியாக' அவ்வுண்மையைக் காட்டிக் கொடுப்பார் என்பதும் சுட்டப்பட்டது. ஒருவருக்கு பல ஆசிரியர்களும், ஆச்சாரியர்களும், வழிகாட்டிகளும் இருக்கலாம். ஆனால் நற்குரு என்பவர் ஒருவராகத்தான் இருக்க மட்டுமே. ஏனெனில், அந்த நற்குருவின் அருள் கிடைத்தவுடனேயே, ஈரற்றமெய்யான ஆத்ம ஞானம் கிடைத்து விடக்கூடும்.

'ஸாக்ஷாத்' எனும் சொல்லுக்கு நேரடியாய்த் தெளிதல் என்று பொருள். 'அக்ஷம்' என்பது இந்திரியங்கள் எனும் புலன் அறிவு. பார்த்தல், கேட்டல், ருசித்தல், நுகர்தல், தொடுதல் முதலான செயல்களால், நாம் ஒன்றை விளங்கிக் கொள்வதே பிரத்யக்ஷ அறிவு என்பதாகும்.

புலனுணர்வால் எதிரே அடைய முடியாத அறிவை 'பரோக்ஷம்' அல்லது 'புலனுக்குத் தொலைவான அறிதல்' எனலாம். அது தொலைவில் உள்ள பொருளைப் பற்றிய அறிவு.

ஆனால், எந்த அறிவு புலனுணர்க்குள் அகப்படாதோ, அதே சமயம் புலனுக்குத் தொலைவிலும் இல்லாததோ, அது ‘அபரோக்ஷம்’ எனப்படுவது.

ஆத்மா என்பது அடையப்படுவது அல்ல. அது ஏற்கனவே அடையப்பட்டது (சித்தவஸ்து). எனவே அது அடையப்பட்டதுதான் எனக் காட்டிக் கொடுத்தவுடனேயே, எப்படி தலைக்கு மேலே மூக்குக் கண்ணாடியை வைத்துக் கொண்டு தேடும்போது, அதன் இருப்பை உணர்ந்த கணமே, அது அடையப்படுவதுபோல, ஆத்மா உணரப்படுகிறது.

மேலும், ஆத்மா எனும் ‘உள்ள பொருள்’ (அஹவஸ்து), புலன், பொறி, மனம் இவற்றால் அறியப்பட முடியாதது. மற்ற பொருளை உணர, அப்பொருள் பற்றிய புலனறிவும், மனதில் நினைவும் வேண்டும். ஆனால் ‘நான்’ எனும் உணர்வு இவற்றை எல்லாம் தாண்டி எப்பொழுதும் துடித்துக் கொண்டிருக்கும் உள் உணர்வு அல்லவா? இருட்டில் உட்கார்ந்திருக்கும் போதும், நம்மை நம்மால் உணரமுடிகிறதே, அதற்கு வெளிச்சம் வேண்டுமா என்ன!

அது போன்றே, தத்வமஸி எனும் வாக்கின் விளக்கமும், அதன் அனுபவமும், நேரடியாக மட்டுமே இருக்க முடியும் என்பதற்காகவே, சாக்ஷாத் எனும் சொல் காட்டப்பட்டுள்ளது. அப்படியான அறிவு, வார்த்தைகளால் காட்டப்பட முடியாதது என்பதனாலேதான், மௌன குருவாக, ஆசான் அமர்ந்திருக்கிறார்.

பாடல் - 4

நானாச்சி$_2$த்$_3$ரக$_4$டோத$_3$ரஸ்தி$_2$த மஹாதீ$_3$பப்ரபா$_4$பா$_4$ஸ்வரம்
ஜ்ஞானம் யஸ்ய து சக்ஷுராதி$_3$கரணத்$_3$வாரா ப$_3$ஹி: ஸ்பந்த$_3$தே |
ஜானாமீதி தமேவ பா$_4$ந்தமனுபா$_4$த்யேதத்ஸமஸ்தம் ஜக$_3$த்
தஸ்மை ஶ்ரீகு$_3$ருமூர்தயே நம இத$_3$ம் ஸ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே ||4||

மண்கலயம் உள்ளேஓர்
மணிதீபம் எரிவதனை - மறந்துவிட்டு
மின்மினியாய்க் கலயத்து
மேல்பரந்த ஓட்டைகளில் – மயங்கிவிட்டுக்

கண்நிறையத் தெரியுமொளிக்
கற்றயதை நிச்சயமாய்க் - காணல்பேதம்
மென்னுடலும் மண்கலயம்
மேலறியும் இந்திரியம் – எல்லாமுள்ளே

நின்றெரியும் ஆன்மவொளி
நிகழ்த்துவது அதுபோலே - ஜகத்திலெல்லாம்
நன்னுருவும் பொருளுமென
நடத்துமுயர் அறிவுமென – ஒளியுமாகி

வண்ணமுடை வடிவநெறி
வைத்துவளர் பரமாத்ம – உருவமாகும்
முன்னகுரு தக்ஷிணா
மூர்த்தியிது நற்பணிவு – முழுமையாமே!

முதல் வரி

நானா = விதவிதமான; சி$_2$த்$_3$ர: = ஓட்டைகளுடைய; க$_4$ட: = பானை; உத$_3$ர = நடுவில்; ஸ்தி$_2$த = நிலையாக இருக்கின்ற; மஹாதீ$_3$ப = பெருவிளக்கு; ப்ரபா$_4$=ஒளி; பா$_4$ஸ்வரம் = வெளிச்சம்;

இரண்டாம் வரி

ஜ்ஞானம் = (அப்படியான) அறிவு; யஸ்ய = எவருடைய; சக்ஷுராதி$_3$= கண் முதலான; கரணத்$_3$வாரா = பொறிகளின் வாயில்; ப$_3$ஹி: = வழி; ஸ்பந்த$_3$தே = செல்கிறது;

மூன்றாம் வரி

ஜானாமி இதி = நான் அறிகிறேன் என; தமே வ பா$_4$ந்தம் = அப்படி ஒளிர்கின்ற; அனுபா$_4$த்யே = தொடர்ந்து விளங்குகிறது; தத் ஸமஸ்தம் = அது முழுமையாக; ஜக$_3$த் = உலகம்;

நான்காம் வரி

தஸ்மை = அவருக்கு; ஸ்ரீ கு$_3$ருமூர்தயே = பிரம்ம ஞானமளிக்கும் குருவின் வடிவுக்கு; நம இத$_3$ம் = இப்பணிவு (முழுமையாகட்டும்); ஸ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே = பிரம்ம ஞானியும், மாயை கடந்தவரும் ஆன ஸ்ரீ தக்ஷிணா மூர்த்திக்கு.

கருத்து

(தோற்ற மாயையினைத் தவிர்த்து, உண்மையை உணரும்போது) எதனுடைய அறிவானது, பல துளைகளையுடைய மண் குடத்துள் ஒளிர்கின்ற விளக்கினைப்போல, கண் முதலிய இந்திரியத் துளைகள் வழியாக, (தன்னுள்ளிருந்து) பிரகாசிக்கின்றதோ, எதனை அவ்வாறு அடைந்தே எல்லா உலகங்களும் விளங்குகின்றனவோ, அந்த பரமாத்மாவாகிய முதற்குரு தக்ஷிணாமூர்த்தி வடிவத்திற்கு, இப்பணிவு முழுமையாகட்டும்!

குறிப்பு

முந்தைய பாடலில், பிரம்ம சத்தே உலகில் எல்லாப் பொருளிலும் இருக்கிறது என்று காட்டிய பகவான் ஆதி சங்கரர், இப்பாடலில் பிரம்ம சித்தே உலகில் எல்லாப் பொருளிலும் ஒளிர்கிறது என்பதைக் காட்டுகின்றார்.

'சத்' என்பதன் பொருள் உள்ளது, இருத்தல் என்பன. 'சித்' என்பது ஞானம், அறிவு என்பன. இருத்தல் என்பது, இருக்கின்றது என்ற அறிவு இல்லாமல் முடியாது. அறிவினால் மட்டுமே இருப்பது, இருக்கிறது எனத் தெளிவதற்கு முடியும். எனவே சத், சித் (உள்ளது, உணர்வது) ஆகிய இவ்விரண்டும் எப்போதும் ஒன்றாகவே பரிமளிக்கின்றன, அவை இரண்டும் உண்மையில் பிரிக்க முடியாதவை என நாம் அறிய வேண்டும்.

ஆத்மா 'சத்சித் ஸ்வரூபமாக', அதாவது, உள்ளதும், உணர்வுமாக ஒளிர்ந்து கொண்டு இருக்கிறது என்றும், அதன் ஒளியினாலேயே இருப்பும், தோற்ற மாயைகளும் துலங்குகின்றன என்றும், இப்பாடலில் பகவான், ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குகிறார்.

இருட்டறையில் துளைகள் உடைய மண்பானைக்குள் ஒரு தீபம் எரிகின்றது. அத்தீப ஒளி, துளைகளின் வழியே ஒளிர்ந்து, பானையையும், அதனைச் சுற்றியுள்ள பொருட்களையும் பிரகாசப்படுத்துகின்றது. அதன் ஒளியினாலேயே, அங்குள்ள இருப்பும் உணரப்படுகின்றது. இது போன்றதே ஜீவனும்.

மனிதர்களாகிய நம்முடல் மண்பானைக்கு ஒப்பு. துளைகள் புலனறிவுக்கான வாயில்கள். ஆத்மாவே உள்ளே எரியும் ஞான தீபம். அதுவே உயிர்த்திறனை அளிக்கிறது. அதனாலேயே வெறும் சடலனமான உடற்கருவியின் ஓட்டைகள், அறிவு ஒளி பெறுகின்றன. இவ்வாறே, உலகில் உயிர்த்தொளிர்வது ஆத்மாவின் 'சத்சித்' உருவமே என்பது இப்பாடலில் காட்டப்பட்டது.

பாடல் - 5

தே3ஹம் ப்ராணமபீந்த்3ரியாண்யபி சலாம் பு3த்3தி4ம் ச ஶூன்யம் விது3:
ஸ்த்ரீபா3லாந்த4ஜடோ3பமாஸ்த்வஹமிதிப்4ராந்தா ப்4ருஶம் வாதி3ன: |
மாயா ஶக்திவிலாஸகல்பிதமஹா வ்யாமோஹ ஸம்ஹாரிணே
தஸ்மை ஶ்ரீகு3ருமூர்தயே நம இத3ம் ஶ்ரீ த3க்ஷிணாமூர்தயே ||5||

அன்னமய கோசமுதல்
ஆனவுடல் பிராணமனம் – அறிவுகோசம்
பின்னமட சூன்யநிலை
பிழையறிவால் நானென்று – பிணைவராரே

சொன்னமட மாதர்சிறு
சோடர் விழிமூடரென – சூழ்ந்தபேயால்
சுத்தமதி விட்டவராய்
மத்தமதி யுற்றுநிலை – மயங்குவாரே

பன்னும்பல வாய்மருளப்
பரவுபிணை யாய்மயங்கிப் – படுகமாயம்
பின்னுவலை யாயறுத்துப்
பிறழுமதி தானழித்துப் – பிரிப்பதான

வண்ணமுடை வடிவநெறி
வைத்துவளர் பரமாத்ம – உருவமாகும்
முன்னகுரு தக்ஷிணா
மூர்த்தியிது நற்பணிவு – முழுமையாமே!

முதல் வரி

தே$_3$ஹம் = உடலாகிய அன்னமய கோசம்; ப்ராணம் = மூச்சாலாகிய பிராணமய கோசம்; இந்த்$_3$ரியாண்யபி = இந்திரியங்களை ஒட்டிய மனோமய கோசம்; சலாம் பு$_3$த்$_3$தி$_4$ம் = நிலையற்ற அறிவாகிய விஞ்ஞானமய கோசம்; ச = மற்றும்; ஶூன்யம் = ஆனந்தமய கோசம்; விது$_3$: = அறிவர்;

இரண்டாம் வரி

ஸ்த்ரீ = மடந்தையர்; பா$_3$ல: = குழந்தைகள்; அந்த$_4$: = குருடர்கள்; ஜட$_3$: = சடப்பொருள், உபமான: = உவமானம். அஹம் இதி = நான் என்று; ப்$_4$ராந்தா: = தெளிவற்றவர்கள்; ப்$_4$ருஶம் = திடமாக; வாதி$_3$ன: = வாதிடுகிறார்கள்;

மூன்றாம் வரி

மாயாஶக்தி = மாயையாகிய சக்தி; விலாஸ = விளையாட்டினால்; கல்பித = ஏற்றி வைக்கப்பட்ட; மஹா = பெரிய; வ்யாமோஹ: = மயக்கத்தினை; ஸம்ஹாரிணே = அழிப்பவராகிய;

நான்காம் வரி

தஸ்மை = அவருக்கு; ஶ்ரீ கு$_3$ருமூர்தயே = பிரம்ம ஞானமளிக்கும் குருவின் வடிவுக்கு; நம இத$_3$ம் = இப்பணிவு (முழுமையாகட்டும்); ஶ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே = பிரம்ம ஞானியும், மாயை கடந்தவரும் ஆன ஶ்ரீ தக்ஷிணா மூர்த்திக்கு.

கருத்து

வல்லுடல் (அன்னமய கோசம் எனும் சோற்றால் ஆன வெளியுடல்), பிராணன் (பிராணமய கோசம் எனும் சுவாசத்தால் ஆன மெல்லுடல்), இந்திரியங்களாகிய புலன் (மனோமய கோசம் எனும் எண்ணத்தால் ஆகிய நுண்ணுடல்), அலைகின்ற புத்தி (விஞ்ஞானமய கோசம் எனும் நுண்ணுடல்), சூன்யமான இருப்பு (ஆனந்தமய கோசம் எனும் காரணவுடல்) என இவற்றையே, எவர், ‘நான்’ என்று மயங்குகிறார்களோ, அவர்கள் மடந்தையர்களுக்கும், குழந்தைகளுக்கும்,

குருடர்களுக்கும், மூட நம்பிக்கையாகிய பேயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் ஒப்புமை ஆவார்கள். (அத்தகு மயக்கத்தில் ஆழ்த்தி, கடந்து உள்ளே இருக்கும் ஆத்மாவே தான் எனும் உண்மையை மறைக்கும்) மாயையின் சாகஸத்தை முற்றும் அறுத்துத் துடைக்கும் தன்மையுள்ள பரமாத்மாவாகிய முதற்குரு தக்ஷிணாமூர்த்தி வடிவத்திற்கு, இப்பணிவு முழுமையாகட்டும்!

குறிப்பு

படைக்கப்பட்டன எல்லாம் தோற்ற மாயை என்றும், தோற்ற மாயைக்கு அதிஷ்டானம் அல்லது ஆதாரமான உண்மை ஆத்மா என்றும், அந்த ஆத்மா, தம்முடைய இருப்பு எனும் 'சத்', ஞானம் எனும் 'சித்' என எவ்விரு சக்திகளும் ஒன்றுக்குள் ஒன்று பிரியாமற் பிணைந்து, விளைத்த உலகமாகிய 'காரியத்தில்', ஊடுருவிக் கிடக்கும் 'காரணமாய்' இருக்கிறது என முந்தைய பாடல்களில் நிறுவிய பகவான் ஆதி சங்கரர், இப்பாடலிலே, காரியமாகிய விளைவினை ஆராய்ந்து, காரணமான ஆத்மாவையும், காரியத்தில் கலந்திருக்கும் அநாத்மாவையும் (அதாவது ஆத்மா அல்லாத தோற்ற மாயையினையும்) பிரித்தறிய வேண்டிய முக்கியத்துவை விளக்குகின்றார். அப்படிப் பிரித்தலே உண்மையான பகுத்தறிவு. அந்தப் பகுத்தறிவு இருந்தால் மட்டுமே, ஆத்மா ஒன்றே எனும் தொகுத்துணர்வு அடைய முடியும். அப்படிப் பகுத்தறியவும், தொகுத்துணரவும், நமக்கு நற்குருவின் அருள் தேவை என்பதையும் இப்பாடல் காட்டுகின்றது.

புராணங்களின்படி, பிரம்ம தேவன் உலகங்களை எல்லாம் படைக்க, இறைவனால் படைக்கப்பட்டாராம். தனக்கு அறிவு வந்த முதற்கணத்திலேயே, பிரம்மதேவன் 'க:' அதாவது 'யார்' எனும் கேள்வியைக் கேட்டாராம். 'நான் யார்' எனும் ஆத்ம விசாரணைதான் அது. அதனாலேயே, பிரம்ம தேவனுக்கு 'க:' என்பதும் ஒரு பெயர்.

'நான் யார்' எனும் வினாவே நமது முதலும் கடைசியுமான வினா. முதலும் கடைசியுமான விடை. எல்லா வேதங்களும், செயல்களும், நெறி முறைகளும் இறுதியில் இவ்வினா-விடைக்கே நம்மை இட்டுச் செல்கின்றன.

வேதாந்தம் இதற்கான ஒரு வழிமுறையாக, ‘நான் இது அல்ல’, ‘இது அல்ல’ என அனுபவ உலகங்களையும், உடமைகளையும் தள்ளித் தள்ளி, இறுதியில் தள்ள முடியாத ‘தான்’ எனும் ஆத்மாவையே ‘நான்’ என உணருதல் எனக் காட்டுகின்றது. ஆயினும் உலகே உண்மை எனவும், சுக துக்கங்களே வாழ்க்கை எனவும், விருப்பு வெறுப்பே நமது குணமெனவும் கொண்டு வாழ்கின்ற எமைப் போன்ற மனிதர்களால், எதை, எப்படித் தள்ளி, இந்த ஆத்ம ஞானத்தைப் பெற முடியும்?

அதனாலேதான், வேதங்கள், முதலில் தர்மம் எனும் நல்வாழ்க்கை நெறிகளை முதன்மைப் படுத்தி, நல்லறம், பணி, தியாகம், தியானம், பக்தி எனப் பல படிகளில் ஏறி உயர வைத்து, அப்படி அடையும் உயரத்தினால், நாம் தள்ள வேண்டிய சுமைகள் வெகுவாகக் குறைய, அதனால் நாமும் மனமும் தெளிய, அடுத்த படியாக ஞானம் எனும் வேதாந்த சாரத்தினை வைத்து இருக்கிறது. இவ்வாறு உலக வாழ்க்கையை ஒட்டியே, ஒழுக்கமுடன் வாழச் செய்து, சீர்படுத்தி, மெதுவாக, ஆனால், நிச்சயமாக, ஆத்ம ஞானத்திற்கு நாம் அனைவரையும் கூட்டிச் செல்லும் பாதையே, ஸநாதன தர்மம் எனும் நமது நெறி.

அந்த நெடும் பயணத்தினை எளிமைப்படுத்தி, முடிவான அறிவுப் பாதையை நமக்குக் காட்ட, கருணையால், பகவான் ஆதிசங்கரர் முதலாக, பகவான் ரமணர் என அவதரித்த பல அருளாளர்கள், ஆத்ம ஞானத்தினை அடையும் நேரடியான அறிவினையும் தந்திருக்கிறார்கள். பகவான் ரமணர், ‘இதெல்லாம் யாருக்கு’ எனும் கேள்வி ஒன்றாலேயே, எதனையும் விசாரித்து, ‘நான் யார்’ என அறியும் பாதைக்கு, ஒரு சுருக்க வழி காட்டிக் கொடுத்துள்ளார்.

எனவே ‘நான் யார்’ எனும் கேள்வியின் பதிலுக்கு, ‘நான் யார் அல்ல’ எனும் கேள்விகளும் முக்கியம். இது தான் இப்பாடலில் காட்டப்பட்டது.

‘நான்’ என்பதுதான், நம் எல்லோருக்கும் இயற்பெயர். பிறந்த போது, பிரம்ம தேவனைப் போல, நமக்கெல்லாம் இயற்கையில் உள்ள அடையாளம் ‘நான்’ எனும் பெயர் தான். அந்த ‘நான்’ குழந்தையாய் இருக்கும்போது, ஆத்ம ஒளியாகவே இருப்பதால், வேறுபாடுகள் பார்க்காமல், ‘யாவும் நானே’ என

விளங்குகின்றது. பிறகு படிப்படியாக, பிறரின் தூண்டுதலால், பெயர் என்று ஒன்று பெற்று, அப்பெயரைத் தனது அடையாளமாகவும், பிறகு உலக அறிவு வர வர, 'நான் ஆன்மா' எனும் அறிவு மறைந்து, 'என்னுடல், என் பொருள், என் உறவு' என உடமைகளையும், 'எனக்காக, என்னால்' என உரிமைகளையும், 'நான்' என தோற்ற மாயையில் தன்னைப் பதித்துக் கொண்ட அகங்காரத்தையும் கொண்டு விடுகிறது. அப்படித்தான் நாமிருக்கிறோம்.

வேதாந்தம் எனவே நம்மை மீண்டும் பிரித்தறுத்து, உண்மையை அறியத் தூண்டுகிறது. அதற்கு உதவியாக, மனிதனின் உடற்மனக் கூறுகளைப் பற்றிய அறிவினையும் தருகின்றது. ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரம் – வல்லுடல், மெல்லுடல், வினையுடல் என நமது உடலை மூன்று வகையாகப் பார்க்கலாம். இம்மூன்று வகை உடல்களையே, ஐந்து வகை வலைகளாகப் பிணைந்திருப்பதாகவும் பார்க்கலாம். அவை அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்பன. 'மய' எனும் சொல்லுக்கு, 'அதனால் விளங்கப்பட்ட' எனும் பொருள். 'கோசம்' என்பதை வலை, அமைப்பு, போர்வை எனக் கொள்ளலாம்.

'அன்ன:' என்பது உணவு. 'பிராண:' என்பது மூச்சு முதலான காற்று. 'மன:' என்பது மனம். 'விஞ்ஞான:' என்பது ஆயும் அறிவு, 'ஆனந்த:' என்பது ஒன்றும் விளக்காச் சுகம். எனவே நாம், சோற்றால் ஆன உடல், காற்றாலான உடல், எண்ணங்களாலான உடல், ஆய்கின்ற சக்தியால் ஆன உடல், ஆழ்ந்து சுகிக்கும் தன்மையால் ஆன உடல் எனக் கொண்டிருக்கிறோம்.

இவ்வுடல்கள் எல்லாம் எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கின்றன என்பதையும், இவற்றில் எல்லாம் ஒட்டாமல், இவற்றுக்கப்பால் எப்போதும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் சக்தியே 'நான்' எனும் ஆத்மா என்பதையும், அஹங்காரம் கொண்டு உலகங்களில் சுக துக்கங்களில் ஆழ்ந்து 'நான்' என்று இயங்கிவரும் அந்த 'நான்' உண்மையன்று என்பதையும் விசாரித்து அறிந்துணர்வதே ஆத்ம வித்யா எனும் 'நான் யார்' வேள்வி.

முதல் வரியில் உடலின் கூறுபாடுகளைச் சுட்டிக் காட்டிய பகவான், இவற்றிலிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்ளத் தெரியாமல், உடலே 'தான்' என மயங்கி இருப்பவர்களை, மடந்தையருக்கும், குழந்தைகளுக்கும், குருடர்களுக்கும், பித்தர்களுக்கும் இரண்டாம் வரியில் ஒப்பாகக் காட்டுவது, அவர்களின் ஒவ்வாச் சில குணங்களை உதாரணமாகத் தெளிவதற்காகவே.

உலகம் தோற்ற மாயம் என்பதாலோ, நாம் அந்தத் தோற்ற மாயத்தில் வீழ்ந்திருக்கிறோம் என்பதாலோ எந்தவிதமான தாழ்வுணர்ச்சியும் நாம் கொள்ள வேண்டியதில்லை. இவை எல்லாமே இறைவனின் திருவிளையாடல் என்றால், இத்தோற்ற மாயத் தொடர்ச்சியும், அதில் பங்கேற்கும் ஜீவராசிகளும், இருந்ததும், இருப்பதும், இருக்கப் போவதும் நிச்சயம். எனினும், இது ஒரு விளையாட்டு எனப் புரிந்து கொள்வது மிக முக்கியம். அப்போதுதான், உலகில் நம்மால் இவ்விளையாட்டில் இன்பமுற ஈடுபட முடியும். நமது துன்பத்தையும், சுகத்தையும் சமமாக ஏற்க முடியும். படிப்படியாக ஆத்ம ஞானப் பயன் பெற வேண்டுமென்றால், அப்படிகளைக் கடக்க பல முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்றால், அவற்றையும் இறைவனின் திருவிளையாட்டில் ஏற்று, உறுதியுடனும், உற்சாகமுடனும் நம்மால் செய்ய முடியும்.

இதுவே மூன்றாம் வரியில் காட்டப்பட்டது.

மாயையின் விளையாட்டால் விளைவது இவ்வுலகம். ஈஸ்வரன் இவ்விளையாட்டை முடித்தருளும் துணைவன், அவனே இவ்விளையாட்டை முற்றும் ஆட்டுவிக்கும் தலைவன். இப்பேருண்மையை உணர்ந்து, பிரம்ம தத்துவமே தானாகி விளங்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இப்பணிவு முழுமை ஆகட்டும் எனப் பாடலின் இறுதி வரி காட்டுகிறது.

பாடல் - **6**

ராஹுக்$_3$ரஸ்ததி$_3$வாகரேந்து$_3$ஸத்$_3$ருஸோ மாயாஸமாச்சா$_2$த$_3$னாத்
ஸன்மாத்ர: கரணோபஸம்ஹரணதோ யோ(அ)பூ$_4$த்ஸுஷுப்த: புமான் |
ப்ராக$_3$ஸ்வாப்ஸமிதி ப்ரபோ$_3$த$_4$ஸமயே ய: ப்ரத்யபி$_4$ஜ்ஞாயதே
தஸ்மை ஶ்ரீகு$_3$ருமூர்தயே நம இத$_3$ம் ஶ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே ||6||

தின்னவரும் ராகுநிழல்த்
தீவுதடை யாய்மறையத் - திறைகள்மூடக்
கன்னல்கதி ராய்நிலவு
கலையவொளி யாம்நிறையக் – காட்சிபோல

என்னதறி வாம்கரணம்
ஏதுமறி யாதடங்கி - இருக்கும்போது
தன்னையறி யாத்துயிலில்
தானுளதாய் ஆனபெருந் – தத்துவமாகி

பின்னர்விழி யால்வெளியில்
பேருலக மாய்ப்பிரிய – பிரக்ஞையாகி
முன்னதுயில் தானெனது
முழுநினைவில் நானெனவே – முகிழ்ப்பதான

வண்ணமுடை வடிவநெறி
வைத்துவளர் பரமாத்ம – உருவமாகும்
முன்னகுரு தக்ஷிணா
மூர்த்தியிது நற்பணிவு – முழுமையாமே!

முதல் வரி

ராஹுக்$_3$ரஸ்த= ராகு வினால் மறைக்கப்பட்ட; தி$_3$வாகர = (பகலைச் செய்கின்ற) ஸூரியன்; இந்து$_3$= சந்திரன்; ஸத்$_3$ருஸோ = ஒப்பானது; மாயா ஸமாச்சா$_2$த$_3$னாத் = மாயையினால் நன்கு மூடப்பட்டவனாக;

இரண்டாம் வரி

ஸன்மாத்ர: = இருத்தல் (சத் உருவமாக); கரண = அந்தகரணங்கள்; உபஸம்ஹரண = ஒடுங்கி விட்டதால்; த: = காரணம்; அபூ$_4$த் ஸுஷுப்த: = உறங்கியவன் ஆவான்; ய: புமான் = எந்த ஜீவன்;

மூன்றாம் வரி

ப்ராக$_3$ = இதற்குமுன்; அஸ்வாப்ஸமிதி= உறங்கினேன் என்று; ப்ரபோ$_3$த$_4$ஸமயே = விழிப்பு அடையும்போது; ய: = யார்; ப்ரத்யபி$_4$ஜ்ஞாயதே = நினைவில் கொள்கிறாரோ;

நான்காம் வரி

தஸ்மை = அவருக்கு; ஸ்ரீ கு$_3$ருமூர்தயே = பிரம்ம ஞானமளிக்கும் குருவின் வடிவுக்கு; நம இத$_3$ம் = இப்பணிவு (முழுமையாகட்டும்); ஸ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே = பிரம்ம ஞானியும், மாயை கடந்தவரும் ஆன ஸ்ரீ தக்ஷிணா மூர்த்திக்கு.

கருத்து

ராகுவால் (ராகுவின் நிழலால்) மறைக்கப்பட்ட சூரியனையும் சந்திரனையும் போன்று, அறியாமையாகிய மாய இருளில் மூடப்பட்டு, தமது கரணங்கள் எல்லாம் ஒடுங்கி உறங்கும் நிலையில், (எப்போதும் உள்ளதான) எது உண்மை மாத்திரமாய் மட்டும் நிற்கின்றதோ, எது, 'நான் முன்னே தூங்கினேன்' என விழிப்பு சமயத்திலே நினைவூட்டிக் கொள்கிறதோ, அந்த பரமாத்மாவாகிய முதற்குரு தக்ஷிணாமூர்த்தி வடிவத்திற்கு, இப்பணிவு முழுமையாகட்டும்!

குறிப்பு

ஆழ் துயிலின் போது, உடலும் இல்லை, மனமும் இல்லை, ‘நான்’ எனும் அறிவும் இல்லை, அதனால் ஒன்றுமே இல்லை எனவும், ஒன்றுமில்லா நிலையே முடிவு எனவும் வாதிட்டு, அதன் அடிப்படையில் ஆத்மா என எவ்விதத் தத்துவ ஞானமும் தேவையில்லை என்பது ஒரு சாரார் வாதம்.

வேதாந்தம் இதனை எப்படி ஆய்கிறது?

அனுபவம் என்பது அனுபவிக்கப்படும் பொருள், அனுபவிப்பவன், அனுபவிக்கும் அறிவு என மூன்றால் ஆனது. அப்படியாயின், அனுபவம் ஒரு நேரத்தில் இல்லை எனச் சொன்னால், அதற்குக் காரணமாக, இம்மூன்றில் ஏதேனும் ஒன்று இல்லாமற் போகலாம். அல்லது இம்மூன்றுமே இல்லாமற் போகலாம் என்பதாகும்.

விழிப்பு அனுபவத்தின் போது, விஸ்வம் எனும் வெளி உலகம் அனுபவப் பொருளாக இருக்கிறது. ஜீவன் இதனை அறிபவனாகவும், அனுபவிப்பவனாகவும் இருக்கிறான். இப்புற உலகை அறிவதற்கு, கரணங்கள் ஆகிய கண், காது, செவி முதலான உறுப்புக்களும், அவற்றால் புலனுறிவும், அவற்றை உணரும் மனமும், ஆயும் அறிவும் இருக்கின்றன. இக்கரணங்களில் ஞானமாகிய ஒளியைக் காரணமாகிய ஆத்மா பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

கனவு அனுபவத்தின் போது, உடலின் தோற்ற மாயை, ஆத்மாவினுள் ஈர்த்து அழிக்கப்பட்டு விட்டது. அதனால் உடலின் வெளிக் கரணங்களும், புலனறிவும் இல்லை. அதனால் விஸ்வம் எனும் வெளி உலகங்கள் இல்லை. ஆனாலும், மனமாகிய அந்தகரணம் ஆத்மாவில் அடங்காதபொது, அது கனவுலகைப் படைத்து, அத் தோற்ற மாயையையும் ஆத்மாவின் ஆதாரத்திலேயே நிறுத்தி, அதனை அனுபவிக்கிறது. எனவே விழிப்புலகிலும், கனவுலகிலும் அனுபவத்திற்கான அனுபவப் பொருள், அனுபவ அறிவு, அனுபவிப்பவன் என மூன்று தேவைகளும் நிச்சயமாய் இருக்கின்றன.

ஆனால் ஆழ்துயிலில் மனம் ஆத்மாவில் அடங்கி விடுகிறது. இதனை 'மனோலயம்' அல்லது மனதின் அடக்கம் எனச் சொல்லுவர் சான்றோர்.

இம்மன அடக்கம் இறைவன் நமக்கு அளிக்கும் நற்பயன்.

நாள் முழுதும் வெளி உலகில் மயங்கித் தன் உண்மையை மறந்த ஜீவனுக்கு ஓய்வு தரும் பொருட்டே, ஆழ்துயிலாகிய மாயப் போர்வையை ஆத்மா விரிக்கிறது. அதனுள், வல்லுடல், மெல்லுடல் என உடலும், மனமும், அறிவும் ஈர்க்கப்பட்டு மறைகின்றன. கரணங்கள் இல்லை என்பதாலும், மனம் லயப்பட்டு விட்டது என்பதாலும், இவ்வாறு உடல், மனம், புற அறிவின் தொகுப்பே 'நான்' என்று இருந்த அஹங்காரமும் மறைந்து விட்டது. அதனால் அங்கே அனுபவிக்கும் அறிவு இல்லை; அனுபவிக்க உலகங்கள் எதுவும் இல்லை. ஆனால் அனுபவிப்பவனான ஜீவன், ஆத்மாவின் 'சத்' எனும் இருப்பாய் இருக்கிறான்.

முந்தைய பாடலில், 'சத்', 'சித்' என இரண்டும் பிரிக்க முடியாமலே இருக்கும் என்றதனால், இங்கே 'சத்' மட்டும் இருப்பதெனக் கூறுவது, 'சித்' இருந்தாலும், அது மனம், அறிவு ஆகிய கரணங்கள் இல்லாததால், உணரப்படாமல் இருக்கிறது என்பதைக் காட்டத்தான். எனவே அனுபவம் இல்லாத ஆழ் துயில் நிலையிலும் ஆத்மா 'உள்ளது'.

இதை எப்படி உறுதி செய்வது? இருத்தல் என்பது உறுதிப்பட, இருத்தலுடன் உணர்தல் எனுமறிவு வேண்டுமே! இதற்கு வேதாந்தம் எடுத்துக் கொள்ளும் வழி, தொடர் அறிவு வாதம் எனும் ஒரு முறை. இதைத் தான் மூன்றாம் வரியில் 'பிரத்யபிக்ஞா' எனும் சொல் காட்டுகின்றது. இதனைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

ஒன்றை அறிவதற்குப் புலனுணர்வு முதலான சக்தியால் கோர்த்தறியும் திறன் தேவை. இதை முதலுணர்தல் (cognition) என்று எடுத்துக் கொள்வோம். நாம் அடையும் எல்லா அறிவுக்கும் முதல் படி, இந்த முதலுணர்தல் எனும் சக்திதான்.

இவ்வாறு முதலுணர்தலால் அடைந்த அறிவு, நினைவுகளாக மனதில் பதியப் பெறுகின்றது. மனதின் அப்பகுதியை வேதாந்தம் ‘சித்தம்’ எனக் கொள்கிறது.

சித்தத்தில் கோர்த்த அறிவினை ஞாபகமடைதல் (rememberance) இரண்டாவது முறையாகும். முதலுணர்தலும், ஞாபகமடைதல் இவ்விரண்டுமே அறிவினை உணர்த்தும் திறன்.

வேதாந்தம் மூன்றாவதாக ‘பிரத்யபிக்ஞா’ எனும் மீண்டுமுணர்தலைக் (recognition) காட்டுகிறது. இது, எப்போது ஒரு பொருள் மீண்டும் புலனறிவுக்குப் புலப்படுகிறதோ, அதோடு ஞாபகத்தினால், இது முன்பே அறிமுகமான பொருள் எனும் முந்தைய அனுபவங்களையும் அறிவில் தருகிறதோ, அப்போது அடையும் அறிவு.

முதலுணர்தலின் போது, அனுபவிக்கப்படும் பொருள், நமது புலன்களுக்கு முன்னே இருக்க வேண்டியது அவசியம். ஆனால் ஞாபகப்படுத்திக் கொள்ள, அத்தகைய அவசியம் இல்லை. பிரத்யபிக்ஞா எனும்போது முன்பு அனுபவித்த பொருளின் தோற்றமும், அதனைப் பற்றிய முன் அனுபவ ஞாபகங்களும் சேர்ந்து ஒரு புதிய அறிவினைக் கொடுப்பது என்று ஆகும். அதாவது, பொருட்களும் புலனறிவுக்கு முன்னே இருக்கிறது. முந்தைய அனுபவமும் ஞாபகமாக இருக்கிறது.

உதாரணமாக, முதல் முறையாக கவரிமான் ஒன்றின் படத்தையும் அதைப் பற்றிய விளக்கத்தையும் ஒருவன் அடைகிறான். அது அவனது முதலுணர்தல். சில நாட்கள் கழித்து, தன்னுடைய ஞாபகத்தில் கவரிமானைப் பற்றிய முதலுணர்வு அனுபவத்தை அறிவில் அவன் காணக்கூடும். மற்றொரு நாள், பூங்காவில் கவரிமானை நேரில் காணும்போது, ஞாபக அறிவும் தோன்றி, முன்னே பார்த்து அனுபவிக்கும் அறிவும் விளங்கும். இதுவே பிரத்யபிக்ஞா எனும் அறிவு.

இதன் அடிப்படை என்ன என்றால், முழுதுணரல், ஞாபகமடைதல், மீண்டுமுணரல் ஆகிய மூன்று அறிவுநிலைகளும் ஒரு தொடர்பு இருந்தால்தான், அல்லது இம்மூன்று அறிவும் ஒருவனுக்கே இருந்தால்தான்,

பிரத்யபிக்ஞா உண்மையாகும். ஆழ்துயிலில் மனமும், அறிவும் இல்லையே? அதனால், ஆழ்துயில் முடித்து எழுந்தவுடன் ஒருவன் 'நான் சுகமாகத் தூங்கினேன்' என்று கூறினால், அது எப்படி முடியும்!

தூங்கினேன் என்பது ஞாபகமடைதலினால். ஏனெனில், நான் படுக்கச் சென்றேன், இப்போது எழுந்திருக்கிறேன், இப்படிப் பிறர் துயில்வதைப் பார்த்திருக்கிறேன் என்பதெல்லாம் காரணம். 'நான்' எனத் தன்னை உணர்தலும், தொடர்ச்சி நழுவாமல், விஸ்வம் எனும் வெளியுலக அனுபவங்களையும் அறியும் காரணம், 'பிரத்யபிக்ஞா' எனும் மீண்டுமுணர்தல். அப்படியானல் அந்த அறிவு ஆழ்துயிலிலும், கனவிலும், விழிப்பிலும் தொடர்ந்து இருந்தாக வேண்டும். அதுவே ஆத்மா எனச் சத்தியமாய் இருக்கிறது. அதனாலேயே, தொடர்ச்சியான அனுபவ நிலைகள ஜீவன் உணரமுடிகிறது.

ஆழ்துயில் சுகம் என்பது எப்படித் தெரிகிறது? சுகமும், துக்கமும் மனதால் விளைபவை என்றால், மனம் இல்லாத போது, ஆழ்துயிலில் சுகம் எங்கு வந்தது? அந்த சுகத்தை உணர்வது யார்?

ஆழ்துயிலில், நமக்கு உலக சுக துக்கங்களுக்கு இடமில்லை. அங்கே எந்தத் துயரும் நுழைய முடியாது. அது ஆத்மாவின் நிலை. எனவே சுகம் என நாம் வர்ணிப்பது, ஆழ்துயிலின் அமைதியைத்தான்! அதுவே ஆனந்தம். அதுவே வினையுடலாகிய ஆனந்த மய கோசம். அந்த அமைதியே ஆத்மாவின் இயற்கை. எனவே இயல்பான அமைதியைத்தான், நாம் விழித்த போது, சுகம் என வர்ணிக்கிறோம். அந்த அமைதிதான் நம்மைக் காப்பது.

எண்ணிப் பாருங்கள்.

ஆழ்துயிலுக்கு ஏழை, பணக்காரன் எனும் பாகுபாடு இல்லை. நல்லவன் கெட்டவன், செல்வந்தன் ஏழை என எவ்வித வேறுபாடும் இன்றி எல்லோருக்கும் அமைதி தருவது அல்லவா துயில்! கணவன் இறந்தான் என அவனுடலின் மேல் விழுந்து, விழுந்து கதறி அழுத மனைவி அப்படியே அயர்ந்து அவ்வுடலின் மேலேயே தூங்குகின்றாளாம். அப்படி ஒரு பாடல் இருக்கிறது.

ஆழ்துயில் என்பது, எல்லாக் கவலைகளையும், எல்லாப் பேதங்களையும், எல்லாத் தோற்ற மாயைகளையும் அழித்து, தனது சந்நிதியிலேயே ஜீவனை வைத்திருக்கும் ஆத்ம தத்துவம். ஆனால், அறியாமை எனும் போர்வையினால் மூடப்பட்டதால், நமக்கு ஆழ்துயில் 'அறிதுயில்' ஆகவில்லை. நமது ஆழ்துயிலில் மடமைச் சுகம் மட்டுமே இருக்கிறது.

எனவேதான் வேதாந்தம், ஆழ்துயிலிலிருந்து நாம் தினமும் எழுகின்ற போதெல்லாம், பிரம்ம தேவனைப் போல, 'நான் யார்' எனும் கேள்வியுடனே எழ வேண்டும் என்றும், அக்கேள்வியினை முதற்படுத்தியே அன்றைய விவகாரங்களில் ஈடுபட வேண்டும் என்றும், அப்படிச் செய்வதால், ஆத்மாவை அநாத்மாவிலிருந்து பிரித்துணரவும், கலந்து பழகும் உலக விவாகரங்களை எல்லாம் ஒரு விளையாட்டாகவே நடத்தவும் முடியும் என்றும் காட்டுகிறது.

இவ்வாறாக, ஆழ்துயிலில் 'ஒன்றுமே இல்லை' எனும் வாதம் பொய்யாகி, ஆழ்துயிலில் 'எல்லாமுமே இருக்கிறது, அது பூரணம் (நிறைவு)' என்றும், ஆத்மா அங்கே சத்தாக இருக்கிறது என்றும் இப்பாடலில் காட்டப்பட்டது. தமிழில் 'செத்துப் போதல்' என்பது, 'சத்துப் போதல்' எனும் ஆத்மாவாகிய 'சத்', உடலாகிய மாயத் தோற்றத்தை விட்டு விலகியதைத்தான் குறிக்கிறது.

ஆழ்துயிலில், 'சத் சித் ஆனந்தம்' ஆகிய ஆத்மா, 'சித்' எனும் அறிவை மறைத்து, சதானந்தம் எனும் ஆனந்த இருப்பாக மட்டுமே விளங்குகின்றது. இதற்கு உதாரணமாக, கிரகண காலத்தின் போது, சூரியனோ, சந்திரனோ மறைந்திருந்தாலும், நாம் அவற்றின் இருப்பை உணர்வது போலவே, ஆழ்துயிலில் அறியாமைப் போர்வை மறைத்த போதும், ஆத்மா பூரணமாய் விளங்குகிறதாய் உறுதியடைய வேண்டும் என இப்பாடலில் காட்டப்பட்டது.

பாடல் - 7

பா$_3$ல்யாதி$_3$ஷ்வபி ஜாக்$_3$ரதா$_3$தி$_3$ஷு ததா$_2$ ஸர்வாஸ்வவஸ்தா$_2$ஸ்வபி
வ்யாவ்ருத்தாஸ்வனுவர்தமானமஹமித்யந்த: ஸ்பு$_2$ரந்தம் ஸதா$_3$ |
ஸ்வாத்மானம் ப்ரகடீகரோதி ப$_4$ஜதாம் யோ முத்$_3$ரயா ப$_4$த்$_3$ரயா
தஸ்மை ஶ்ரீகு$_3$ருமூர்தயே நம இத$_3$ம் ஶ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே ||7||

சின்னவராய்ச் சீரிளமை
சேர்முதுமை மாற்றமுடற் - செய்தபோதும்
என்னவராச் சாட்சியென
ஏதுமொரு மாற்றமற – இருத்தலாகி

அன்னதுபோல் முன்விழிப்பு
அடர்கனவு துயிலாகி – ஆழ்ந்தபோதும்
நுண்ணுமனு பவநூலால்
நூற்றுதொட ராற்றிவர – நுணுக்கமான

தன்னுளனாய்த் தான்நானாய்
தத்துவமாய் ஆத்மனெனத் - தந்துகாட்ட
சின்மயமாய்த் தன்விரலில்
செய்தகுறி யாலடியார் – சேர்வதான

வண்ணமுடை வடிவநெறி
வைத்துவளர் பரமாத்ம – உருவமாகும்
முன்னகுரு தக்ஷிணா
மூர்த்தியிது நற்பணிவு – முழுமையாமே!

முதல் வரி

பா$_3$ல்யாதி$_3$ ஷு = குழந்தை (இளமை, முதுமை) முதலான; அபி = அதுபோல; ஜாக்$_3$ரதா$_3$தி$_3$ஷு = விழிப்பு (கனவு, துயில்) முதலான; ததா$_2$ = அதுபோல; ஸர்வாஸ்வவஸ்தா$_2$ஸ்வபி = மற்ற அவஸ்தைகளில் எல்லாம் (மற்ற சுக துக்கங்கள்);

இரண்டாம் வரி

வ்யாவ்ருத்தாஸ் = வந்து போகின்ற அவைகளுக்குள்; அனுவர்தமான = தொடர்ந்து இருப்பதான; அஹம் இதி = நான் எனும் ஆத்மா; அந்த: = உள்ளே; ஸ்பு$_2$ரந்தம் = விளங்குவது; ஸதா$_3$=எப்போதும்;

மூன்றாம் வரி

ஸ்வாத்மானம் = ஆத்ம தத்துவத்தை; ப்ரகடீ கரோதி = தெளிவாக விளக்கம் செய்கின்ற; ப$_4$ஜதாம் = அண்டியவர்களுக்கு; யோ = எவர்; முத்$_3$ரயா = அடையாளமாக; ப$_4$த்$_3$ரயா = மங்களமான;

நான்காம் வரி

தஸ்மை = அவருக்கு; ஸ்ரீ கு$_3$ருமூர்தயே = பிரம்ம ஞானமளிக்கும் குருவின் வடிவுக்கு; நம இத$_3$ம் = இப்பணிவு (முழுமையாகட்டும்); ஸ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே = பிரம்ம ஞானியும், மாயை கடந்தவரும் ஆன ஸ்ரீ தக்ஷிணா மூர்த்திக்கு.

கருத்து

இளமை முதலான பருவ மாற்றங்களிலும், அவ்விதமே நனவு (மற்றும் கனவு, துயில்) முதலான அனுபவ மாற்றங்களிலும், (எவ்வித மாற்றங்களும் இன்றி) தொடர்ந்து இருப்பதும், எப்போது தம்முள்ளேயே 'நான்' என (அந்த நான் எனும் உணர்வின் மூலமாக) விளங்கி வரும் ஆத்மாவை, எது தன்னைத் தொழுவாருக்கு, சின்முத்திரை அடையாளத்தால் (மௌனமாகக்) காட்டுகின்றதோ, அந்த பரமாத்மாவாகிய

முதற்குரு தக்ஷிணாமூர்த்தி வடிவத்திற்கு, இப்பணிவு முழுமையாகட்டும்!

குறிப்பு

முந்தைய பாடலில், 'நான்' எனும் ஆத்மாவே தொடந்து எல்லா அனுபவ நிலையிலும் இருப்பதாகக் காட்டிய பகவான் ஆதி சங்கரர், இந்த 'நான் எனும் ஆத்மா', 'நான் எனும் அஹங்காரம்' அல்ல எனத் தெளிவுபடுத்த, மீண்டும் 'த்வம்' எனும் சொல்லின் விளக்கத்தைத் தருகின்றார்.

இதனை விளக்க, 'அனுவர்த்தமான' எனும் சொல்லில் சுட்டிக் காட்டப்பட்ட ஒரு வேதாந்த நியாய முறையை எடுத்துக் கொள்கிறார். 'அனுவிருத்தி நியாயம்' என்பது, தொடர்ந்திருத்தல் எனும் வாதம்.

எது எப்போதும் தொடர்ந்து இருக்கிறதோ, அது 'நானாகிய ஆத்மா' என்றும், அத்தொடர்பு இல்லாமல், எல்லா அனுபவங்களுக்கும் சாட்சியாக எதுவும் இருக்க முடியாது என்றும், அதனால், விழிப்புலகில் நாம் கொள்ளும் 'நான்' எனும் அஹங்காரம் ஆத்மா அல்ல என்றும் காட்டப்படுகிறது.

முந்தைய பாடலிலேயே, உடல் வேறு, மனம் வேறு என்பது விழிப்பு, கனவு, துயில் ஆகிய நிலைகளினால் அறியப்பட்டது. மேலும் நமக்கெல்லாம் கிடைக்கும் அனுபவ நிலைகளையே, ஆத்ம தத்துவ விளக்கத்திற்கான அடிப்படையாக எடுத்துக் கொள்கிறது வேதாந்தம்.

பருவமாற்றம் ஒரு உதாரணம்.

குழந்தை, இளமை, முதுமை என நாம் பரிணாம மாற்றங்கள் பெற்று வருகிறோம். வயதாக ஆக, நமது உடல் மாறுகிறது. அறிவியலின்படி, நேற்று இருந்த உடற்செல்கள் இன்று இல்லை. மாறிக் கொண்டே இருக்கின்றன. மனமும் மாறுகிறது. குழந்தையின் மனதும், எண்ணவோட்டங்களும், வயதாகும் போது மாறி விடுகிறது. ஆனால், 'நான்' மாறிவிட்டேனா? என் உடல் வளர்ந்து விட்டது, தளர்ந்து விட்டது, மனம் முதிர்ந்து விட்டது எனவெல்லாம் அறிந்தாலும், 'நான் மாறவில்லை' என்பதுதான் நம் ஒவ்வொருவரின் உட்திடம்.

ஒரு பருவத்தில் மற்றொரு பருவம் இல்லை. ஒன்றுக் கொன்று மாறுபட்ட அனுபவ நிலைகள். ஆனால் அவற்றிலும் தொடர்ந்து இருப்பது 'நான் எனும் ஆத்மா'.

தினமும் அனுபவிக்கும் துயில் அனுபவமும் ஓர் ஆதாரம். 'நான் உடல், நான் ஆண், நான் பெண், நான் ராஜா, நான் ஏழை' என்ற எந்த விதமான வேறுபாடுகளோ, தீர்மானங்களோ ஆழ்துயிலில் அடங்கும் போது, அழிகின்றன.

'நான் உடலே' என்பது, ஜீவன் தோற்ற மாயையிடம் தோற்ற நிலை. அந்த 'நான்' உண்மையல்ல. அந்த 'நான்' மமதை. அந்த 'நான்' அஹங்காரம்.

மாறி மாறி வரும் அனுபவ நிலைகளிலும்,, மாறாத 'சச்சித் ஸ்வரூபம்' ஆத்மாவாக 'நான், நான்' எனும் ஓயாத துடிப்பாக, உள்ளே ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. அதுவே 'நான் எனும் ஆத்மா'.

எல்லா சுக துக்க நிலைகளும் கடந்த அமைதியாகிய ஆனந்த நிலையிலேயே நிறைந்திருப்பதால், 'சத்', 'சித்', 'ஆனந்தம்' எனும் சச்சிதானந்தமாய் ஆத்மா, எங்கும், எப்போதும், எல்லாத் தோற்றங்களுக்கும் ஆதாரமாக, அமைதியுடன் விளங்குகிறது.

பாடல் – **8**

விஶ்வம் பஶ்யதி கார்யகாரணதயா ஸ்வஸ்வாமிஸம்ப$_3$ந்த$_4$த:
ஶிஷ்யாசார்யதயா ததை$_2$வ பித்ருபுத்ராத்$_3$யாத்மனா பே$_4$த$_3$த: |
ஸ்வப்னே ஜாக்$_3$ரதி வா ய ஏஷ புருஷோ மாயாபரிப்$_4$ராமித:
தஸ்மை ஶ்ரீகு$_3$ருமூர்தயே நம இத$_3$ம் ஶ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே ||8||

தன்னைமறைத் திடமாயமுழுத்
தடையாக ஆனததன் - தன்மையாலே
பன்னுசெயல் உடையன்விளை
பயனுரியன் ஆவனெனப் – பலருமாகி

நண்ணுகுரு சீடனுரு
நயந்தபிதா பிள்ளைஎனப் – பலவுவேடம்
இன்னுமுற வாகித்தனுள்
இரண்டுபல பேராகி – எழுப்பிவையம்

முன்னுவிழிப் பாலுலகு
மூடுகன வாலுலகு – முகிழஏற்றிப்
பின்னுமனு பவசீலப்
பேறுகலைப் பேதமதி - பிரவாகமான

வண்ணமுடை வடிவநெறி
வைத்துவளர் பரமாத்ம – உருவமாகும்
முன்னகுரு தக்ஷிணா
மூர்த்தியிது நற்பணிவு – முழுமையாமே!

முதல் வரி

விஶ்வம் = உலகம்; பஶ்யதி= பார்ப்பவன்; கார்யகாரணதயா = காரணம், காரியம் என்றதாக; ஸ்வ ஸ்வாமி = பொருளுக்கு உரிமையானவன்; ஸம்ப₃ந்த₄த: = எனும் உறவுடன்;

இரண்டாம் வரி

ஶிஷ்யாசார்யதயா = குரு சீடன் என்றதாக; ததைதை₂வ = அப்படியே; பித்ருபுத்ராத்₃யாத்மனா = பிள்ளை, தந்தை எனும் வடிவமாக; பே₄த₃த: = வேறுபாடுகளுடன்;

மூன்றாம் வரி

ஸ்வப்னே = கனவில்; ஜாக்₃ரதி வா = விழிப்பிலும்; ய: = எந்த; ஏஷ புருஷ: = இந்த ஜீவன்; மாயா = மாயையின்; பரி = முழுதும்; ப்₄ராமித: = குழம்பியவன்;

நான்காம் வரி

தஸ்மை = அவருக்கு; ஶ்ரீ கு₃ருமூர்தயே = பிரம்ம ஞானமளிக்கும் குருவின் வடிவுக்கு; நம இத₃ம் = இப்பணிவு (முழுமையாகட்டும்); ஶ்ரீ த₃க்ஷிணாமூர்தயே = பிரம்ம ஞானியும், மாயை கடந்தவரும் ஆன ஶ்ரீ தக்ஷிணா மூர்த்திக்கு.

கருத்து

எந்த புருஷன் மாயையினால் முற்றும் மயக்கம் பெற்றவனாய், செயல், பயன் எனும் உடமை உடையவன் எனவும், அதுபோன்றே மாணவன், ஆசிரியன் எனவும், தந்தை, மகன் எனவும் பலவிதமாக உருவத்திலும், உறவுகளிலும் வேறுபாடுகள் கற்பித்துக் கொண்டு, விழிப்பு, கனவு எனும் அனுபவ நிலைகளில், உலகத்தினை (தன்னிலும்) வேற்றுமையாகக் காண்கிறானோ, அந்த பரமாத்மாவாகிய முதற்குரு தக்ஷிணாமூர்த்தி வடிவத்திற்கு, இப்பணிவு முழுமையாகட்டும்!

குறிப்பு

உலகில் ஒருவன், தான் செயல் செய்வபவன் என்றும், செயல்களின் பயனை அனுபவிப்பவன் என்றும், அதே போல மாணவனாகவும், ஆசிரியராகவும், தந்தையாகவும், மகனாகவும் என ஒருவனே பல பாத்திரங்களாக, உறவினாலும், செயலினாலும் பலவாக விளங்குகின்றான். அத்தகைய வேறுபாடுகள் விழிப்புலக அனுபவங்களைப் போலவே, கனவுலக அனுபவங்களிலும் நடக்கிறது.

இருப்பினும், தாம் ஒருவனே எல்லாப் பாத்திரங்களாக விளங்குவது அறியப்படுவது போலவே, எல்லா அனுபவநிலைகளிலும், மாறாமல் இருப்பது ஆத்மா எனவும், வேறுபாடுகள் விளங்கிக் கொண்டிருக்கும் உலகங்கள் எல்லாம் தோற்ற மாயை எனவும் தெளிந்து கொள்ள வேண்டும்.

தோற்றங்கள் எல்லாம் மாயை என்றால், தோற்ற மாயையான உலகத்தில் விளங்கும் சாத்திரங்களும், சாத்திரங்கள் தரும் குருவும் கூட மாயையாகத் தான் இருக்க வேண்டும் எனும் கேள்வி எழுகிறதே?

தோற்ற மாயையுள் அடங்கியதால், நாம் சாத்திரங்களும், குருவும் கூட தோற்ற மாயைதான் என எடுத்துக் கொண்டாலும், அவையும் ஞான விழிப்புக்குப் பயன் தருவன என உணர வேண்டும்.

கனவில் புலி வந்து பயமுறுத்தும்போது, கனவைத் தொலைத்து, விழிப்பு நிலையை நாம் அடைவது போலவே, தோற்ற மாயையில் இருக்கும் சாத்திரத்தின் அறிவும், குருவின் அறிவுரையும், நமக்கு ஞான விழிப்பினைத் தரும். எனவே சாத்திரமும், குருவும் எந்நிலையிலும் உண்மைக்கு வழிகாட்டும் எனும் உறுதி கொள்ள வேண்டும்.

ஆகையால் உலக வழக்கத்தில் நாம் ஏற்கும் ஒவ்வொரு பொறுப்பிலும், உறவிலும், அதற்கான கடமைகளைச் செய்யும் போதும், அச்செயல்களை எல்லாம் தன்னில் ஏற்றிவைக்கப்பட்ட சுமையை இறக்கி வைக்கும் கடனாக, பிணையின்றிச் செய்ய வேண்டும். ஒரு விளையாட்டாக,

நமது கடமைகளுக்கான பதவிகளை, ஏற்றுக் கொண்ட நாடக வேடமாய், நன்றாக நடத்தி முடிக்க வேண்டும்.

அப்படியானால், முக்தி எனும் விடுதலை என்பது எது?

அது, தோற்ற மாயத்திலிருந்து வேறுபட்ட ஆத்மாவே 'தான்' எனும் உணர்ந்த நிலை! முக்தி என்பது அடையக் கூடிய பொருள் அல்ல. உணரக் கூடிய நிலை. எனவே முக்தியடைந்த ஜீவன், ஆத்மாவாகவே இருக்கிறது. அந்த ஜீவன் முக்தனுக்கு உலகம் 'மித்யா' எனும் உண்மை தெரிவதால், விழிப்புலகையும், ஓர் கனவாய் ரசித்துக்கொண்டு, ஈரற்ற உண்மையிலேயே நிலைத்து இருக்க முடிகின்றது.

இப்பாடலில், அவ்வாறாக உலகம் தோற்ற மாயை எனவும், அதில் விளையும் உறவுகளும், செயல்களும் தோற்ற மாயையே எனவும் அறிகின்ற ஜீவன், அவ்வறிவின் முதிர்ச்சியால், ஜீவ-ஈஸ்வர ஐக்கியத்தை அடைந்த ஶ்ரீ தக்ஷிணாமூர்த்தியாக, அண்டியோருக்கு அருள்பாலிக்கும் ஞான குருவாக விளங்குவதாகப் பணிகின்றது.

பாடல் - 9

பூ$_4$ரம்பா$_4$ம்ஸ்யனலோ(அ)நிலோ(அ)ம்ப$_3$ரமஹர்னாதோ$_2$
ஹிமாம்ஶு: புமான்
இத்யாபா$_4$தி சராசராத்மகமித$_3$ம் யஸ்யைவ மூர்த்யஷ்டகம் |
நான்யத்கிஞ்சன வித்$_3$யதே விம்ருஶதாம் யஸ்மாத்பரஸ்மாத்$_3$விபோ$_4$:
தஸ்மை ஶ்ரீகு$_3$ருமூர்தயே நம இத$_3$ம் ஶ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே || 9||

மண்வடிவும் நீருமொளி
மயமும்வளி மாவெளியும் - மாற்றமாகி
தண்ணிலவும் சூரியனும்
தகைபுருடன் ஆகுமிவை – தாங்கமேனி

மின்னசைவும் அசையாத
மேனிகளும் தாவரமும் – மிக்கஞாலம்
முன்னுமதெண் தேகமென
முற்றுமறி வாலுணர – முடிவுமாகும்

என்னதது போலயிலை
எங்குமுள தேதுமிலை – என்றுஞானத்
திண்ணமடை வார்கள்முனி
தீர்வுமிகு வார்களேதோ – அதுவுமான

வண்ணமுடை வடிவநெறி
வைத்துவளர் பரமாத்ம – உருவமாகும்
முன்னகுரு தக்ஷிணா
மூர்த்தியிது நற்பணிவு – முழுமையாமே!

முதல் வரி

பூ$_4$: = பூமி; அம்பா$_4$ம்ஸி = நீர்; அனல:= அணைக்க முடியா தீ; அநில: = காற்று; அம்ப$_3$ரம் = வானம்; அஹர் நாத$_2$ = பகலின் தலைவனான சூரியன்; ஹிமாம்ஶு: = சந்திரன்; புமான் = உயிரினங்கள்;

இரண்டாம் வரி

இதி =என; ஆபா$_4$தி = விளங்குகிற; இ த$_3$ம் = இந்த; சர அசர = அசையும் அசையாத; ஆத்மகம் = தன்மையுடைய; யஸ்யைவ= யாருடைய; மூர்த்தி அஷ்டகம் = எட்டுவித உடலாக;

மூன்றாம் வரி

ந அன்யத் = (ஆன்மாவைத் தவிர) வேறுபாடு இல்லை; கிஞ்சன = சிறிதேனும்; வித்$_3$யதே = கிடையாது; விம்ருஶதாம் = ஆய்ந்துணர்பவர்களுக்கு; யஸ்மாத் = எந்த; பரஸ்மாத்$_3$ = மேலான; விபோ$_4$: = பிரம்மத்தை;

நான்காம் வரி

தஸ்மை = அவருக்கு; ஶ்ரீ கு$_3$ருமூர்தயே = பிரம்ம ஞானமளிக்கும் குருவின் வடிவுக்கு; நம இத$_3$ம் = இப்பணிவு (முழுமையாகட்டும்); ஶ்ரீ த$_3$க்ஷிணாமூர்தயே = பிரம்ம ஞானியும், மாயை கடந்தவரும் ஆன ஶ்ரீ தக்ஷிணா மூர்த்திக்கு.

கருத்து

நிலம் நீர், நெருப்பு, வளி, ஆகாயம், சூரியன், சந்திரன், புருஷன் என, அசையும், அசையாத் தன்மையுடனாகிய உலகங்கள் எல்லாம், யாருக்கு எட்டு உடலாக விளங்குகிறதோ, (இவ்வுண்மையினை) ஆய்ந்து தெளிவருக்கு, எங்கும் பரந்திருக்கும் இப்பொருளைக் காட்டிலும் வேறு ஒன்றும் இல்லையோ, அந்த பரமாத்மாவாகிய முதற்குரு தக்ஷிணாமூர்த்தி வடிவத்திற்கு, இப்பணிவு முழுமையாகட்டும்!

குறிப்பு

இப்பாடல், அத்வைத முடிவை முற்றும் ஏற்கும் முதிர்ச்சி இல்லாதவர்க்கும் பயன்படும் வழியாக, உலகையே இறைவனாகப் பார்க்கும் பண்பினைத் தருகின்றது.

அத்வைத முடிவான 'பிரம்மம் சத்யம்' என்பதை ஏற்றுக் கொள்வதில் கடினமில்லை. ஏனெனில், எல்லா மதங்களும், அறிவியல் வழிகளும் கூட, நிலையான ஒரு பொருள் எப்போதும் இருக்கிறது என்பதை முன் நிறுத்துகின்றது.

ஆனால் மற்றொரு அத்வைத முடிவான 'ஜகந் மித்யா' என்பதைப் புரிந்து ஏற்பதுதான் கடினம். இது உலகவியலான கல்விகளால், கலைகளால், செயல்களால், எளிதாக ஏற்றுக் கொள்ள முடியாத கருத்து. ஏனெனில், சுக துக்கங்களும், அவற்றின் காரணமான விருப்பு வெறுப்புக்களுமே, நமது வாழ்க்கையை அமைப்பனவாய் இருக்கின்றன. வெளி விவகாரங்களால் பெறும் சுக துக்கங்களும், அதற்குக் காரணமான பொருட்களும், உறவுகளும் அழிந்து போவன, எப்பொழுதும் மாறிக் கொண்டே போவன என்றெல்லாம் நாம் தெரிந்திருந்தாலும், அவற்றையே தேடி, அவற்றிலேயே வாழ்வின் குறிக்கோள் இருப்பதாக, நாம் நம்மை அமைத்துக் கொண்டிருக்கிறோம். எனவே, உலகத்தையும், அதன் அனுபவத்தையும் தோற்ற மாயை என ஏற்பதற்கு, நமக்கு ஆழமான உறுதியும், மனத் தெளிவும் அவசியம் வேண்டும்.

எனினும் தோற்ற மாயை என்பதற்காக, உலகத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்பதல்ல ஞானம். இறைவனாகிய ஈஸ்வரனே உலகங்களை, தோற்ற மாயமாக ஏற்றி வைத்தார் என்றால், அந்தத் தோற்ற மாயமான உலகமும் புனிதமானதாய்த்தான் இருக்க வேண்டும்! அதனை ஏன் விலக்க வேண்டும்! படைத்தல் ஆகிய ஐந்தொழில்களும் இறைவனின் திருவிளையாடல் எனில், அந்த விளையாட்டில் நமக்கெல்லாம் பங்குள்ளதென்றால், அதனை மறுத்து எந்தப் பரிசை முக்தி எனும் பதவி தந்து விடப் போகிறது?

இக்கேள்விகள் எல்லாம் நியாயமும், தூய நோக்கமும் கொண்டவைதான். முதலில், உலகம் தோற்ற மாயம் எனச்

சொல்வதனால், அது பிழை என்றோ, தீயது என்றோ பொருளில்லை. அதன் முக்கியக் குறிக்கோள், உலகின் நிலையற்ற தன்மையைத் தெளிந்து கொள்ள வேண்டும் என்பதே!

தோற்ற மாயம் எனத் தெளிந்தால், இவ்வுலகை விட்டு ஓடி விடு என்றும் வேதாந்தம் சொல்லவில்லை. ஈஸ்வரனின் படைப்பாகிய விளையாட்டைக் கண்டு களி, அந்த விளையாட்டில் ஈடுபட்டு இருந்தும், அத்தோற்ற மாயைக்குள் கட்டுப்படாமல் இருக்கக் கற்றுக் கொள் என்று தான் கூறுகிறது.

அதனால் முக்தி என்பது பதவியோ, பரிசோ அல்ல, அது முற்றும் விழிப்புற்ற ஆத்மனாக இருத்தல் என்பதே என அறிந்து கொள்ள வேண்டும்.

எப்படி அந்நிலையை அடைவது?

அதற்கு, அத்தகைய அறிவுக்கு உயர்த்திக்கொள்ள, நமக்குள் திடமான மனதையும், அறிவுத் தெளிவையும் ஏற்படுத்திக் கொள்ளுதலே முதற்படி. அதற்குச் சரியான வழியிலே நம் வாழ்க்கை அமைய வேண்டும்.

விருப்பு, வெறுப்பு எனும் கொடிய விதைகள்தான், ஸம்ஸாரம் எனும் பிறவிப் பெருமரத்தை நமக்குள் வளர்க்கிறது என்பதால், விருப்பும் வெறுப்பும் இல்லாத வாழ்வையே, நாம் வாழ வேண்டும். அதற்கு அடிப்படைத் தேவை அன்பு.

அன்பு மட்டுமே நமது மொழியாக, வழியாக ஆக வேண்டும். அன்பினாலேயே, தோற்ற மாயை எனக் காட்டப்பட்ட உலகத்தையும் இறைவடிவமாக நேசிக்கும் திறன் அமைய முடியும். அன்பின் திரளால் மட்டுமே, உலகத்தைப் புனிதமாயும், அது தோற்ற மாயை எனினும் இறைவனின் புனிதப் படைப்பு எனவும் பார்க்கின்ற முதிர்ச்சியைப் பெற முடியும்.

இதுவே இப்பாடலின் கரு.

பாடல் பலன்

ஸர்வாத்மத்வமிதி ஸ்பு$_2$டீக்ருதமித$_3$ம் யஸ்மாத$_3$முஷ்மின் ஸ்தவே
தேனாஸ்ய ஶ்ரவணாத்தத$_3$ர்த$_2$மனனாத்$_3$த்$_4$யானாச்ச ஸங்கீர்தனாத் |
ஸர்வாத்மத்வமஹாவிபூ$_4$திஸஹிதம் ஸ்யாதீ$_3$ஶ்வரத்வம் ஸ்வத:
ஸித்$_3$த்$_4$யேத்தத்புனரஷ்டதா$_4$ பரிணதம் சைஶ்வர்யமவ்யாஹதம் ||10||

தெள்ளென உள்ளதைத் தெளிவுறத் தந்ததை
விள்ளுவர் சொல்லுவர் வெல்லுவர் மெல்லுவர்
உள்ளதை உடையதை உல்குவர் ஒன்றுவர்
நல்லெண் சித்தியும் நவநிதியமும் அள்ளுவர்

முதல் வரி

ஸர்வாத்மத்வம் = யாதும் ஆத்மா எனும் தத்துவம்; இதி = இவ்வாறு; ஸ்பு$_2$டீக்ருதம் = விளக்கப்பட்டதோ; இத$_3$ம் = இது; யஸ்மாத$_3$= எதனால்; அஷ்மின் = இந்த; ஸ்தவே= துதியில்;

இரண்டாம் வரி

தேன = அதனால்; அஸ்ய= இதனை; ஶ்ரவண தத$_3$ர்த$_2$= பொருள் உணர்ந்து கேட்டு; மனனாத்$_3$= சிந்தித்து; த்$_4$யானாத் = தியானம் செய்து; ச = மேலும்; ஸங்கீர்தனாத் = அதன்படி ஒழுகுதல்;

மூன்றாம் வரி

ஸர்வாத்மத்வ= ஆத்ம ஞானமான; மஹாவிபூ$_4$தி = பேரறிய பெருமை; ஸஹிதம்= உடையதான; ஸ்யாத$_3$= கிடைக்கும்; ஈஶ்வரத்வம் = ஈஸ்வரனாதல்; ஸ்வத:= இயற்கையாகும்;

நான்காம் வரி

ஸித்$_3$த்$_4$யேத் = கிடைக்கு ம்; தத் =; புன: = மீண்டும்; அஷ்டதா$_4$= எட்டு; பரிணதம் = விதமான; ச = மேலும்; ஐஶ்வர்யம் = நந்நிதி; அவ்யாஹதம் = தடையின்றி.

கருத்து

யாதொரு காரணத்தால் இவ்விதம் தெளிவாக விளக்கப்பட்ட பரமாத்ம தத்துவத்தைக் கேட்பதாலும், இதன் பொருளைச் சிந்திப்பதாலும், மீண்டும் மீண்டும் கூறுவதாலும், எல்லாமுமாயிருத்தல் எனும் பரமாத்ம சித்தி, தானாகவே உண்டாகும். மேலும், 'அட்டமா சித்தி' எனும் எட்டுவிதப் பெரும்பயனும், நற்பொருளும் தடையற்றுக் கிடைக்கும்.

குறிப்பு

இப்பாடல், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் எனும் இந்நூலை, பொருளுணர்ந்து பயின்று, பாடிப் பரப்பி, ஒழுகி இருத்தலின் பலன் எவை எனக் காட்டுகின்றது. ஈரறுமெய்யான அத்வைத ஞானமடைந்தோர் விழையும் முக்தி அவர்களுக்கு முக்கியப் பலனாக அமைகிறது. முக்தி என்பது, சச்சிதானந்த வடிவாக, ஆத்மநிலையில், ஜீவ-ஈஸ்வர ஐக்கியத்தை உணர்ந்திருக்கும் நிலை எனத் தெளிகிறது. இடைப்பயனாக, இந்நூலை அவ்வாறே பயிலும் எவருக்கும், அணிமா முதலான அட்ட சித்திகளும், எல்லா விதமான வளங்களும் தடையில்லாமல் கிடைக்கும் எனவும் உறுதி செய்கிறது.

இவ்வாறு
ஸ்ரீமத் சங்கராசார்ய பகவத் பாதாள் அருளிய
ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்
நிறைவினை அடைகிறது.

1. கண்ணன் மொழி – கவிதை வழி (ஸ்ரீ பகவத்கீதை – தமிழ்)
2. மணீஷா பஞ்சகம் - ஆதி சங்கரர் (தமிழ், ஆங்கிலம்)
3. காசீ பஞ்சகம் - ஆதி சங்கரர் (தமிழ், ஆங்கிலம்)
4. சாதனா பஞ்சகம் - ஆதி சங்கரர் (தமிழ், ஆங்கிலம்)
5. மாயா பஞ்சகம் - ஆதி சங்கரர் (தமிழ், ஆங்கிலம்)
6. ப்ரசன்னோத்ர ரத்ன மாலிகா - ஆதி சங்கரர் (தமிழ், ஆங்கிலம்)
7. சிவானந்தலஹரீ - ஆதி சங்கரர் (தமிழ்)
8. ஆதி குரு தக்ஷிணாமூர்த்தி வழிபாடு (தமிழ்)
9. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் - ஆதி சங்கரர் (தமிழ்)
10. உபநிடதங்கள் உதவும் தடங்கள்
    a. ஈசாவஸ்ய உபநிடதம் (தமிழ்)
    b. பிரம்ம உபநிடதம் (தமிழ்)
    c. கடோப உபநிடதம் (தமிழ், ஆங்கிலம்)
    d. கேன உபநிடதம் (தமிழ்)
    e. கணபதி உபநிடதம் (தமிழ்)
    f. ஹம்ஸ உபநிடதம் (தமிழ்)
    g. கைவல்ய உபநிடதம் (தமிழ்)
11. மதுரை ஸ்ரீ மீனாக்ஷி துதிப்பாமாலை (தமிழ்)
12. ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி திருவெம்பாவை (தமிழ்)
13. ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி புஷ்பமாலிகா (தமிழ்)
14. ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி நவமணி மாலை (தமிழ்)
15. ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி மந்த்ர புஷ்பமாலிகா – ஆதி சங்கரர் (தமிழ்)
16. ஸ்ரீ கால பைரவர் அஷ்டகம் – ஆதி சங்கரர் (தமிழ்)
17. ஸ்ரீ பவானி அஷ்டகம் – ஆதி சங்கரர் (தமிழ்)
18. மணிகர்ணிகா அஷ்டகம் – ஆதி சங்கரர் (தமிழ்)
19. ஸ்ரீ முருகன் அந்தாதி (தமிழ், ஆங்கிலம்)
20. ஸ்ரீ முருகன் துதிப்பாமாலை - லண்டன் (தமிழ், ஆங்கிலம்)
21. உயர்வாசற் குன்று ஸ்ரீ முருகன் துதிப்பாமாலை (தமிழ், ஆங்கிலம்)
22. ஸ்ரீ கனக துர்க்கை அன்னை துதிப்பாமாலை (தமிழ்)
23. திருமுருகன் பொன்னூசல் (தமிழ்)
24. திரு வேங்கடவன் பொன்னூசல் (தமிழ்)
25. ஸ்ரீ மஹா பெரியவர் காஞ்சி பரமாச்சார்யார் துதி (தமிழ்)

Sri Dakshinamurthy Stotram

Bhagavan Adi Sankara

www.meenalaya.org

ISBN 978-1-910528-03-7

9 781910 528037 90000>